மத்வாச்சரியார் உபயக்ராஸ ராஹூதயம் என்று ஒரு கண்டனக் கிரந்தம் எழுதினார். ராஹூ உதயமானால் சந்திரன் சூரியன் இரண்டும் போய்விடும் என்பது அவருடைய அபிப்பிராயம். ராஹூ சாயாக்கிரஹம். நிழல். கேதுவும் அப்படியே. நவக்கிரஹங்களில் இந்த இரண்டும் போனால், பிரதானமாக இருப்பவை ஏழு கிரஹங்கள்தாம். இந்த இரண்டுக்கும் தனியான கணனம் வேண்டாம். சூரிய சந்திரர்களுக்கு எதிரான கதிதான் இந்த இரண்டினுடைய கதியாகும்.

சாயை என்பதற்கு இருட்டு என்று அர்த்தம். இருட்டு உண்டானால் பிரகாசத்தை மறைக்கிறது. அந்த அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு, மத்வாச்சாரியர் உபயக்கிராஸராஹூதயம் என்று பெயர் வைத்தார்.

முதலில் ஏற்பட்ட கிரந்தம், சாந்தியும் விவேகமும் உண்டானால் பிரபோதம் உண்டாகிறது என்ற கருத்தைச் சொல்லுவதற்காக ஏற்பட்டது. அதைக் கண்டிக்க வேண்டுமென்று தேசிகருக்குத் தோன்றி, அவர் கண்டனம் எழுதினார். பின்பு அதற்கும் கண்டனம் வந்தது. முதல் கிரந்தத்துக்கே சூரியோதயம் என்று பெயர் வைத்திருந்தால், அடுத்தபடி வந்த கண்டனம் ராஹூதயமாக இருக்கும். ஆனால் அவர் இப்படி வரும் என்று நினைத்து எழுதவில்லை. சந்திரோதயமென்று ஏன் பெயர் வைத்தார்?

உஷ்ணமும் ஒளியும் சேர்ந்தேயிருக்கும். தாபத்தில் நமக்குப் பிரியமில்லை. பிரகாசத்தில் மட்டும் பிரியம் இருக்கிறது. அந்தப் பிரகாசத்தைக் குளிர்ச்சியாகத் தர வேண்டும். சந்திரன் அப்படிச் செய்கிறான். ஞானம் அப்படிப்பட்டது. மற்ற வித்தைகளில் சிரமம், தாபம், அஹங்காரம் முதலியவை ஏற்படுகின்றன. ஆத்ம ஜ்ஞானத்தைத் தவிர பாக்கி எல்லாம் தாபத்தைத் தரும். மனதுக்கு ஆனந்தத்தைத் தருவது பிரபோதம் ஒன்றுதான். அதற்குச் சந்திரனை திருஷ்டாந்தமாக அவர் சொன்னார்.

அந்தப் பெயர் அடிபட்டுப் போக வேண்டும் என்ற நோக்கத்தோடு, கண்டனம் செய்தவர் சூரியோதயம் என்ற பெயரை வைத்தார். அதில் குளிர்ச்சியில்லாவிட்டாலும் பிரகாசமாவது இருக்கிறது. மத்வாச்சாரியர் அதைக்கூடப் பார்க்கவில்லை. பெயர் இரண்டுக்கும் விரோதமாக இருந்தாற்போதும் என்று நினைத்து, ராஹூதயம் என்று வைத்தார்.

மனத்திற்கு சந்தோஷத்தைக் கொடுத்து இன்பத்தைத் தருவதனால், ஞானத்தைச் சந்திரனாக கிருஷ்ணமிச்ரர் சொன்னார்.

ஸங்கல்ப சூரியோதயத்தில், எதிரி அரசர்களுக்குச் சைன்யங்களாக டம்பன் முதலியவர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள். டம்பனை 'நீ எந்த ஊர்?' என்று ஒருவர் கேட்கிறார். 'நான் இருப்பது சின்னக் காஞ்சீபுர அக்கிரகாரம்' என்று அவன் சொல்லுகிறான். வேதாந்த தேசிகருக்குத் தாத்தாச்சாரியாரைக் கண்டால் பிடிக்காது. அவர் சின்னக் காஞ்சீபுரத்தில் இருந்தார். அதை நினைத்துக்கொண்டு இப்படி தேசிகர் சொல்லியிருக்கிறார்.

முதலில் தாபத்தை உண்டு பண்ணி ஒரு பிரகாசத்தைக்

கொடுப்பது சூரியோதயம். தாபத்தை சமனம் பண்ணி அப்புறம் உண்டாவதுதான் சந்திரோதயம்.

உஷ்ணமில்லாத பிரகாசத்தைத் தருபவன் சந்திரன். அந்தப் பிரகாசத்தை குளிர்ச்சியோடு கொடுக்கிறுன். அவனுக்கு அமிர்த கிரணன் என்பது ஒரு பெயர். சூரிய கிரணம் சுடும்; சந்திர கிரணம் குளிர்ச்சியாக இருக்கும்.

அத்வைதஸித்தி என்ற ஒரு கிரந்தம், மதுசூதன சரஸ்வதி என்பவர் செய்திருக்கிறுர். அதற்கு மத்வமத ரீதியாகத் தரங்கிணீ என்று ஒரு கண்டனம் உண்டு. அத்வைதஸித்திக்கு வியாக்யானம் ஒன்று, கௌட தேசத்தில் இருந்த பிரம்மானந்த சரஸ்வதி என்பவர், சந்திரிகை என்ற பெயரோடு பண்ணியிருக்கிறுர். பெங்களூரில் அநந்தாழ்வார் என்ற தென்கலை வைஷ்ணவர் ஒருவர் இருந்தார். தேசிகரை விட வித்வத்தில் பெரியவர் என்று அவரைச் சொல்லுவார்கள். அவர் சந்திரிகைக்கு நியாய பாஸ்கரம் என்று ஒரு கண்டனம் எழுதியிருக்கிறுர். தேசிகர் சந்திரோதயத்துக்குக் கண்டனமான சூரியோதயம் எழுதியதை அனுசரித்து, அவர் சந்திரிகையின் கண்டனத்திற்கு நியாய பாஸ்கரம் என்று பெயர் வைத்தார்.

அத்வைத சாஸ்திரத்தில் ஞானத்தைச் சந்திரிகைக்கு சமானமாகச் சொல்லுகிறுர்கள். மன்னுர்குடி மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ ராஜு சாஸ்திரிகள் என்ற ஒரு பெரியவர் இருந்தார். அவர் பெரிய சாஸ்திரஜ்ஞர். அவருடைய பாண்டித்தியம் அவருடன் சரியாய்ப் போய்விட்டது. அவர் அந்த பாஸ்கரத்துக்கு ஒரு கண்டனம் எழுதினுர். அதற்கு நியாயேந்துசேகரம் என்று பெயர் வைத்தார்.

சந்திரனை உயர்த்தி வைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்பட்டது அது. இந்து சேகரன் என்பது பரமேச்வரனுடைய பெயர். இந்த இரண்டும் அந்தப் பெயரில் பொருந்தியிருக்கின்றன. ஈச்வரன் சந்திரனைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறுரல்லவா? இந்துசேகரம் என்ற பெயர் பல கிரந்தங்களுக்கு இருக்கிறது. சப்தேந்துசேகரம் என்ற வியாகரண சாஸ்திரம் ஒன்று இருக்கிறது. அது மிகவும் உயர்ந்தது. அதைப் படித்தவர்களை சேகராந்தம் படித்தவர்களென்று சொல்லிப் பாராட்டுவார்கள். பரிபாஷேந்து சேகரம் என்று ஒரு வியாகரண சாஸ்திரம் இருக்கிறது. இந்துசேகரனுக்குப் பிரியமான பேர்களை உடைய பல வியாக்கியானக் கிரந்தங்கள் இருக்கின்றன. அஸ்திமாலை, ஸர்வமங்களை என்ற பெயர்களுடைய கிரந்தங்கள் இருக்கின்றன.

பின்னுல் வந்த பலவித தடபுடலுக்கும் மூலம், கிருஷ்ணமிச்ரர் பக்தியோடு சாந்தமாகப் பிரபோத சந்திரோதயம் எழுதி

அஜ்ஞான நிவர்த்தி பண்ணுகிற ஒரு கட்சிதான். அவரும் டம்பனைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். 'நீ எங்கே இருந்து வந்தாய்?' என்று டம்பனைக் கேட்டபொழுது, அவன் 'நான் பிரம்மலோகத்திலிருந்து வருகிறேன்' என்று சொல்லுகிறான்.


'அங்கே என்ன விசேஷம்?'

'அங்கே போனேன். பிரம்மா தம்முடைய துடையிலே உட்கார்த்தி வைக்க யோசனை பண்ணினார். உடனே கோமயத்தைக் கொண்டு துடையைச் சுத்தி பண்ணினார். உட்கார்ந்தேன். கொஞ்சம் பேசிக் கொண்டிருந்தோம். அப்புறம் வந்துவிட்டேன்' என்று டம்பன் சொல்லுகிறான்.

கிருஷ்ணமிச்ரர் அந்த கிரந்தத்தை கட்சியில்லாமல் சாந்தத்தோடு எழுதினார். அவர் ஓர் உதயம் எழுதினார். அதிலிருந்து கட்சிப்பிரதிகட்சிகள் உண்டாகிப் பலத்துப் போய்விட்டன. அவர் சாந்தமாகப் பண்ணினார். இப்படி வரப் போகிறதென்று அவருக்குத் தெரியாது.

●

வினையை வெல்லும் உபாயம்



ஸ்ரீ திருமுருக
கிருபானந்தவாரியார்

உயிருக்குப் பெருங்கேடாக இருப்பது பிறவி நோயேயாகும். பிறப்பும் இறப்பும் மாறி மாறி வந்து பல்லூழிகளாக உயிர் துன்புறுகின்றது. பிறவி நோய் வினை காரணமாக வருகின்றது. அந்த வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என மூன்று பிரிவுகளாகப் பிரிகின்றது. ஆகாமியம், செயப்படும் வினை; அது நல்வினை தீவினையென இருவகைப்படும். சஞ்சிதம், பக்குவப்படாமல் இருப்பாக நிற்கும் வினை. பிராரப்தம், இப்பொழுது உடம்பு முகந்துகொண்டு துய்க்கும் வினை. வினை நீங்கினால் மலம் நீங்கும். மலம் நீங்கப் பிறவி நீங்கும்.

எனவே, உயிர்க்குப் பெருங்கேடான பிறவிநோய் வினைவழி வருகின்றது. அதன் வித்து ஆகாமியம். ஆகாமியத்தை முதலில் ஒழிக்க வேண்டும். ஆகாமிய வினைக்குக் காரணம், விருப்பு வெறுப்பு. விருப்பு வெறுப்பு, பிராரப்த வினைகளைத் துய்க்குங்கால் உண்டாகும் உள்ளத்தின் மாறுபாடு.

ஆகவே, விருப்பு வெறுப்பே வினை வருவதற்கு வழியாகும். அதனை நுணுகி அறிந்து அறவே களைய வேண்டும். எப்பொருளினும் விருப்பும் வெறுப்பும் வைக்கக்கூடாது. மெய்ப் பொருளை அடையும் வழி இதுவே.

இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவர். வேண்டுதல் வேண்டாமையிலான். அவனுடைய அடியைச் சேர்தலாவது, நாமும் விருப்பு வெறுப்பு அற்றவர்களாக ஆவதுவே. அப்போது யாண்டும் இடும்பையில என்னும் பதம் கிடைக்கின்றது. துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் உண்டாகின்றன.

விருப்பு வெறுப்பு நிகழாமல் இருப்பது என்றால், அது சாமானியமன்று. நெருப்பும் சந்தனமும் ஒன்றுபோல் இருப்பது என்றால், எளிதில் வாய்ப்பதன்று. இறைவனுடைய திருவடியை என்றும் மறவாது சிந்தித்து வழிபடுவதே, விருப்பு வெறுப்பைத் தவிர்க்கும் வழியாகும்.

இறைவன் திருவடியைச் சிந்திப்பது சுலபந்தான். ஆனால் எல்லோரும் சிந்திப்பதில்லை. சிலருக்குத்தான் அது தித்திக்கின்

றது. ஏன்? அதுவும் பிறவிநோயின் தன்மையே.

நோய்வாய்ப்பட்டவனுக்கு கற்கண்டு கசக்கின்றது. ஏழுவயதுப் பெண் குழந்தைக்குக் கணவன் தித்திப்பானு? கல்யாணம் செய்து வைத்தாலும் கணவனோடு பழகி இன்புறுவதை விரும்புவாளா? அவளுக்கு அப்போது மணல் வீடு கட்டி பொம்மை வைத்து ஆடுவதிலேயேதான் விருப்பம். பக்குவம் எய்திய ஒருத்தி கணவனோடு தனித்துப் பேசி ஆடி மகிழ்வதையே விரும்புகின்றாள். அவளுக்குப் பிறந்த வீடு, ஊர், சுற்றம், நண்பர், விளையாட்டுப் பொருள்கள் எல்லாம் கணவன் இன்பத்திற்கு நிகராகாது. எல்லாவற்றையும் உதறித் தள்ளி விடுகின்றாள்.

அதுபோல், பக்குவம் வந்த ஆன்மாக்கள் இறைவனோடு பழகுவதையே இன்பமாக எண்ணி, சுற்றம், தொடர்பு, ஊர், பேர், செல்வம் எல்லாவற்றையும் உதறித் தள்ளி விடுகின்றார்கள். விளையாட்டுச் சிறுமி, பக்குவம் வந்த பெண் தன்னுடன் வந்து கலந்து கொள்ளாதது குறித்துப் பரிகசிப்பாள். அதுபோல உலகத்தோடு உறையும் ஆன்மாக்கள், இறையோடு உறையும் ஆன்றோரைக் கண்டு பரிகசிப்பர்.

அவ்வாறே, இறையோடுகலந்து திருவருள் மயமாக உள்ளவர்க்கு, விருப்பு வெறுப்பு, இன்ப துன்பம், இகழ் புகழ், வெய்யில் மழை, வாழ்வு தாழ்வு, பொன் மண் எல்லாம் ஒன்றுபோல் காட்சி தரும்.

பல பல பிறவிகளில் செய்யப்பட்டு, பக்குவத்திற்கு வராமல் குவிந்து களஞ்சியம் போல் கிடக்கும் வினை சஞ்சித வினை. அதனை இறைவனே தீர்க்க வேண்டும். ஆகாமிய வினையைத் தியானுதி தவவொழுக்கத்தால் நாம் நீக்க வேண்டும். பிராரப்தம் அனுபவித்தே தீர வேண்டும். சஞ்சித வினை இறைவனுடைய திருவருளால் பொடிபடும்.

ஆகாமியம் சஞ்சிதமாகி, சஞ்சிதம் பிராரப்தமாகி வருகின்றது நன்செய் புன்செய் என்ற இரு விதமான பயிர் விளைவது போல, நல்வினை தீவினை யென இரு வகையாக விளைவது ஆகாமியம்.

விளைந்த நெல்லைப் பழமையாக்கும் பொருட்டு, களஞ்சியத்தில் சேமித்து வைத்திருப்பது போன்றது சஞ்சிதம்.

களஞ்சியத்திலிருந்து சிறிது கொண்டு வந்து சமையலுக்கு வைத்துக்கொண்டது போன்றது பிராரப்தம்

ஒரு விவசாயி 100 கலம் நெல்லை சாகுபடி செய்தான். அதில் எழுபது கலம் நெல்லை மேலைக்கு என்று களஞ்சியத்தில் போட்டு வைத்தான். பத்துக் கல நெல்லை வயலிலே கொண்டு போய் விதைத்தான். இருபது கல நெல்லைச் சாப்பாட்டிற்கென்று மனைவியிடம் ஒப்படைத்தான்.

வயலிலே விதைத்தது மழை பொழியாமையாலும், தண்ணீர் பாய்ச்சாமையாலும், பயிர் சாவியாகிவிட்டது. மனைவியிடம் தந்தது சாப்பிட்டு முடிந்தது. வீடு தீப் பிடிக்கக் களஞ்சியத்திலுள்ள நெல் எரிந்து கரிந்து விட்டது. எனவே எல்லாம் காலியாகி விட்டது.

அதுபோல, ஆகாமியம் விளையாமலும், பிராரப்தம் அனுபவித்தும், சஞ்சிதம் திருவருளாலும் காலியாகிவிட்டால், பிறவி நோய் தீர்ந்துவிடுகின்றது.

இந்திரன் தன் குருவைக் கொன்ற கதை



ஸ்ரீவித்யா மார்த்தாண்ட
பிரம்மஸ்ரீ
C.V. ஸ்வாமி
சாஸ்திரிகள்

பிருகஸ்பதி இந்திரனுக்கு மேலும் சில தருமங்களை எடுத்துக் கூறினார்:

இந்திரா! இந்தப் பிரபஞ்சமானது மண், வான், வளி, அனல், புனல் என்னும் ஐம்பெரும் பூதங்களால் ஆகியது. இதில் உள்ள உயிர்ப் பொருள்கள் அனைத்தும், பூர்வ ஜென்ம வாசனைகளோடு கூடியவை. பிறவி யெடுத்தது முதல், உணவு, உறக்கம், மன்மதபீடை (அதாவது, காமவேட்கை), மூப்பு அடைதல் இவையெல்லாம் ஜீவர்களுக்கு ஸ்வபாவமாகவே ஏற்படுகின்றன. உணவு இல்லை யென்றால், உயிர் வாழ முடியாது. அந்த உணவுதான் மன்மத பீடைக்கும் காரணமாக இருக்கிறது. ஆகையால், எல்லாப் பிராணிகளாலுமே மன்மத பீடையைத் தடுத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது.

ஆனால், மன்மதபீடையின் காரணமாக, மனிதன் பிறர் மனைவியரை நாடக்கூடாது. நாடினால், அது மகாப் பாபம். இதை நன்கு அறிந்திருந்தும், சில மனிதர்கள் அந்தப் பாபத்துக்கே ஆளாகிறார்கள்.

இன்னும் சில பாபிகள் தம் குருவின் பத்னி, குருவுக்குச் சமமான பெரியோர்களின் பத்னிகள், தாய்மாமனின் பத்னி, தாயாரின் சகோதரிகள், இவர்கள் மீதும்கூட நாட்டம் கொள்கிறார்கள். பெற்றஅன்னையையும், உடன் பிறந்த தங்கையையுமே இச்சிக்கின்ற மகாபாபிகளும், உலகில் இல்லாமல் இல்லை. இவர்களுடைய பாபங்களுக்குப் பரிகாரமே கிடையாது.

இருந்தாலும், இந்திரனே! நான் ஓர் இரகசியம் கூறுகிறேன், கேட்பாயாக! அதாவது, ஒருவன் எவ்வளவு பெரியமகாபாபத்தைச் செய்திருந்தாலும், அந்தப்பாபம் நாசம் அடைவதற்கான மார்க்கத்தை இப்போது உனக்குச் சொல்லப் போகிறேன்.

பக்தி சிரத்தையுடன் ஸ்நானம் செய்து, ஜலத்தில் மூழ்கிய வண்ணம் பஞ்சதசீ என்னும் மகாமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஆவிருத்தி ஜெபம் செய்து, அன்னை பராசக்தியை ஒருவன் அன்போடு வழிபட்டு வந்தால், அவன் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான். எல்லா ஆபத்துக்களும் அவனை விட்டு அகன்று விடுகின்றன. அவன் எண்ணிய காரியங்கள் எல்லாம் இனிது நிறைவெய்துகின்றன.

இந்திரனே! உனக்கு இன்னும் சில தருமங்களையும் சொல்லுகிறேன், கேள். கள், கஞ்சா, மரத்திலிருந்து வழிகின்ற கோந்து, வெள்ளைப் பூண்டு, வெங்காயம், முருங்கைக்காய், பீர்க்கங்காய், கத்தரிக்காய், அத்திப் பழம், இவை போன்ற பொருள்கள் புத்தியை மந்தப் படுத்தும். ஆகையால், விவேகத்தை விரும்புகிறவன் இவற்றைச் சாப்பிடக்கூடாது

அது மட்டும் அல்ல. அன்னத்தை விலைக்கு விற்பவன், வைத்தியன், பெண்களால் பிழைப்பு நடத்துபவன், போர்த் தொழிலையே பிழைப்பாகக் கொண்டவன், துறவு பூண்டவன், வேத நெறிகளையும் ஆசாரங்களையும் நிந்திப்பவன், ஒழுக்கம் தவறிய பெண்கள், நாகரிகம் இல்லாத பெண்கள் — இவர்களால் சமைக்கப்பட்ட உணவையும் சாப்பிடக்கூடாது. எண்ணெயில் வேக வைத்த பொருள்களையும் உண்ணக் கூடாது. பணிப் பெண்களால் பக்குவம் செய்யப் பட்ட அன்னத்தையும் அருந்தலாகாது. இவற்றை யெல்லாம் அருந்தினால் பாபம்வந்து சேரும்.

ஆனால், இந்திரனே! எந்தவிதமான உணவாக இருந்தாலும், அம்பிகையை தியானம் செய்து, அவளுடைய பஞ்சதசீ மகாமந்திரத்தை ஜெபம் செய்து, முதலில் அவளுக்கு நிவேதனம் செய்ததாக பாவனை பண்ணி, அதன் பிறகு ஒருவன்சாப்பிடுவானாயின், அந்த ஆகாரத்தைப் பற்றிய எந்த ஒரு தோஷத்தினாலும் அவன் பாதிக்கப்படமாட்டான். இவ்விதம் நாள்தோறும் தவறாமல் செய்து வருபவனுக்கு, வாழ்க்கையில் தரித்திரமோ பயமோ ஏற்படமாட்டாது.

அம்பிகையினுடைய மகா மந்திரத்தை ஒழுங்காக ஜெபம் செய்து வருபவன், இந்த உலகத்தில் எல்லா மங்களங்களையும் எய்துவான். முடிவில் முக்தியையும் அடைவான்.

இந்திரனே! உனக்கு இப்போது ஏற்பட்டு வருகிற அமங்கலமான துர் நிமித்தங்களைக் கண்டு நீ கலக்கம் அடைந்திருக்கிறாய். துர்வாஸருடைய சாபம்

உன்னைச் சூழ்ந்து நிற்கிறது. அந்த சாபம் ஏற்படுவதற்குக் காரண மான ஒரு பழைய நிகழ்ச்சியை உனக்கு இப்போது நினைவு படுத்துகிறேன், கேள்.

கச்யப மகரிஷிக்கு, திதி என்ற பத்தினியிடத்தில், தனு என்ற ஒரு குமாரனும், ரூபவதி என்ற ஒரு குமாரியும் பிறந்தார்கள்.

அந்த ரூபவதியை, கச்யபர் பிரம்மாவுக்குத் திருமணம்செய்து கொடுத்தார்.

பிரம்மாவுக்கு ரூபவதியினிடத் தில் **விசுவரூபன்** என்ற ஒரு புத் திரன் பிறந்தான். அவன் மூன்று தலைகளோடு கூடியவன். வேதங் களை நன்கு உணர்ந்தவன். ஸ்ரீமந் நாராயணனிடத்தில் மிகவும் பக்தியுடையவன்.

ஒரு சந்தர்ப்பத்தில், நீயும் தேவர்களும் அந்த விசுவரூபனை உங்கள் குருவாக வரித்தீர்கள். அவன் அசுரர் தலைவனாகிய தனு வுக்கு மருமகனாய் இருந்தபடியால் அவன் தேவகுருவாக ஆனதிலி ருந்து, தேவர்களுக்கும் அசுரர் களுக்கும் சண்டைஏற்படவில்லை. தேவர்களும் அசுரர்களும் ஒரு வருக்கொருவர் சமமான பல சாலிகளாக விளங்கினார்கள்.

இந்திரனே! அப்போது உனக்கு ஒரு சந்தேகம்ஏற்பட்டது. தேவர் களுக்கு குருவாக இருந்து கொண்டே, விசுவரூபன் அசுரர் களுக்கு நன்மை செய்து வரு கிறான் என்று நீ ஐயமுற்றாய். அதன் விளைவாக, அந்த விசுவ ரூபனுடைய மூன்று தலைகளையும் நீ அறுத்துத் தள்ளிவிட்டாய்.

விசுவரூபன் ஒரு பிரம்ம நிஷ் டன். எல்லாப் பிராணிகளிடத் தும் கருணை கொண்டவன். வேதங்கள் முழங்கும் முகங்களை உடையவன். அவனைக் கொன்ற பாபத்தினால் நீ பீடிக்கப்பட்டு, மேருமலையின் குகை ஒன்றின் உள்ளே போய், நெடுங்காலம் அமர்ந்திருந்தாய்.

உன்னால் விசுவரூபன் கொல் லப்பட்ட செய்தியை, நாரதர் மூலமாக பிரம்மா கேள்விப்பட் டார். புத்திரசோகத்தால் பெரி தும் வருந்திய அவர், அதற்குக் காரணமாய் இருந்த உன்மீது மிகவும் கோபம் கொண்டார். "இந்திரன் சீக்கிரமாகவே தன் னுடைய ஸ்ரீயை (அதாவது, ராஜ்யலக்ஷ்மியை) இழந்துவிடுவா னாக!" என்று, அவர் உனக்கு சாபம் கொடுத்தார்.

இதற்கு இடையில், தேவர்கள் தங்களுக்கு அரசன் இல்லாமை யால் வருத்தம் அடைந்து, அசு ரர்களால் பீடிக்கப்பட்டவர் களாய், சத்யலோகத்துக்குச் சென்று பிரம்மதேவரிடம் முறை யிட்டார்கள். ஆனால், அவர்க ளுடைய துன்பத்தைஎப்படி நீக்கு வது என்று பிரம்மதேவருக்கே புரியவில்லை. எனவே, அவர் தேவர்களையும் அழைத்துக் கொண்டு, வைகுண்டத்தில் உள்ள தம் தந்தையாகிய திருமா லிடம் சென்றார்.

அவர்களுடைய குறைகளைக் கேட்டநாராயணமூர்த்தி, நீண்ட நேரம் ஆலோசனை செய்து, கடைசியாக ஒரு முடிவுக்கு வந் தார். அதன்படி, விசுவரூபனைக் கொன்றதனால் உனக்கு ஏற்பட்ட பாபத்தை அவர் மூன்று பகுதி களாகப் பிரித்தார். பிரித்து, அதில் ஒரு பகுதியைப் பெண்க ளுக்கும், மற்றொரு பகுதியைப் பூமிக்கும், மூன்றாவது பகுதியை

மரங்களுக்குமாக, அவர் பங்கிட்டுக் கொடுத்தார். பெண்களிடத்தில்மாதவிடாயாகவும், பூமியினிடத்தில் களராகவும் (அதாவது, உவர்மண்ணாகவும்), மரங்களிடத்தில் பிசினாகவும், அந்தப் பாபத்தின் கூறுகள் இன்றைக்கும்விளங்கிக் கொண்டு இருக்கின்றன.

அவ்வாறு அந்தப் பாபத்தை ஏற்றுக்கொண்டதற்குப் பரிசாக, பெண்களுக்கும் பூமிக்கும் மரங்களுக்கும் மூன்றுவரங்கள்கொடுக்கப்பட்டன. அதன்படி, பெண்கள் தாம் கருவுற்றிருக்கும் போதும் கணவரைக் கூடி மகிழலாம். பூமியை வெட்டிக் குழி தோண்டினாலும், அந்தப் பள்ளம் நாளடைவில் தானாகவேமறைந்துவிடும். மரங்களை வெட்டினாலும் அவை மறுபடியும் தளிர்விட்டு வளரும்.

இவ்வாறாக, விசுவரூபனைக் கொன்ற பாபம் உன்னைவிட்டு விலகியது. உடனே நீயும் மேரு மலைக் குகையிலிருந்து வெளியே வந்து, முன்போல் தேவர்களுக்கு அரசன் ஆனாய். பிரம்மதேவரும் உன்னை மன்னித்துவிட்டார். ‘‘இருந்தாலும், என் சாபம் வீண் போகாது. அதை இன்னொரு சமயம் இந்திரன் அனுபவித்தே தீர வேண்டியதாய் நேரும்’’ என்று கூறினார் பிரம்மதேவர். அதன் விளைவாகவே, நீ இப்போது துர்வாசரின் சாபத்துக்கு ஆளாகியிருக்கிறாய் — என்று விளக்கிக் கூறினார் பிருகஸ்பதி.

[குறிப்பு: சென்ற இதழில் வெளிவந்த ‘‘வேடனும் திருடனும்’’ என்னும்கதையின் கடைசி வரியில் உள்ள ‘‘பிரம்மதேவர்’’ என்பதை, ‘‘பிருகஸ்பதி பகவான்’’ என மாற்றிக் கொள்க.

—ஆசிரியர்]



நலம் தரும் நன்னெறிகள்

வேத வேதாந்த
வித்வரத்னம்
பிரம்மஸ்ரீ

ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

ஸ்ரீ லக்ஷ்மீதேவியை அடைந்ததால் மிகப் பெருமை வாய்ந்தவரும், ஸத்யபாமையிடம் ஆசை கொண்டவரும், சுவர்க்கத்தையும் மோக்ஷத்தையும் அளிக்கக் கூடியவரும், மூவுலகத்தினராலும் போற்றப்பட்டவருமான ஸ்ரீ கிருஷ்ணன்போல், ஐச்வர்யத்தை அளிப்பதால் மிகப் பெருமை வாய்ந்ததும், ஸத்யத்தையே முக்கியமாக அண்டியிருப்பதும், ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் அளிக்கக்கூடியதும், மூவுலகத்தினராலும் போற்றப்பட்டதுமான ஸதாசாரம் மிக்க மேன்மையுடன் விளங்கட்டும்.

ஆசாரத்தால் ஆயுளும், விரும்பிய பிரஜைகளும், குறைவற்ற செல்வமும் கிடைக்கிறது.

ஆசாரத்தால் ஸ்வர்க்கம், சுகம், மோக்ஷம் எல்லாம் பெறப்படுகின்றன. ஆசாரத்தால் எதுதான் சித்திக்காது? ஸத்யத்தைவிடச் சிறந்த தர்மம் கிடையாது.

[சுமார்தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, காஷ்மீரத்திலே க்ஷேமேந்திரர் என்ற ஒரு மகாகவி வாழ்ந்து வந்தார். அவர் இயற்றிய பல அரிய வடமொழி நூல்களுள், சாருசர்யா என்பதும் ஒன்று. சாருசர்யா என்றால், நல்லொழுக்கம் எனப்பொருள்படும். அந்த நூலின் கருத்துக்களே கீழே தரப்படுகின்றன.

— ஆசிரியர்]

மனிதன் பிராஹ்ம முஹூர்த்தத்தில்சோம்பாமல் நித்திரையை விட்டு எழுந்திருக்கவேண்டும். நற்குணங்களில் பற்றுள்ள லக்ஷ்மி காலையில் மலர்ந்த தாமரையை ஆச்ரயிக்கின்றாள்.

சூர்யோதயத்திற்குமுன் ஐந்தாவது நாழி முதல் இரண்டரை நாழி வரை உள்ள காலத்திற்கு, பிராஹ்ம முஹூர்த்தம் எனப் பெயர். அக்காலத்திலேயே அவசியம் விழித்துக்கொள்ள வேண்

டும். இல்லேயேல் லக்ஷ்மீ விலகு வாள்.

காலேயில் தாமரை தவருமல் மலர்வதால்தான், லக்ஷ்மீ அதைத் தனக்கு வாசஸ்தலமாக ஏற்றுக் கொண்டிருக்கிருள். அதுபோல் நாமும் காலேயில் விழித்துக் கொண்டிருந்தால்தான், லக்ஷ்மீ நம்மிடம் வாசஞ் செய்வாள்.

''பிருஹன் மநு'' என்பவரும், அக்காலத்தில் தூங்குகின்றவனி டம் மூதேவி வசிப்பாள் எனக் கூறியுள்ளார். அக்காலத்தில் பல ருக்குச் சோம்பல் ஏற்படுவது இயற்கை. இருந்தாலும் அதற்கு இடங்கொடுக்கக் கூடாது. சில தினங்கள் பழகி விட்டால் பிறகு அக்காலத்தில் நித்திராதேவி தாஞகவே விலகிவிடுவாள்.

பிரதிதினம் எழுந்திருந்தவுடன் ஸ்நானம் செய்து, அதஞல் உட லில் உள்ள மலங்களேக் களேந்தவ ஞகவும், அந்த ஸ்நானத்தால் உண்டான புண்ணியத்தால் புனிதமான உடலேயுடையவஞக வும் இருக்க வேண்டும். விருத்ரா சுரனேக் கொன்ற தேவேந்திரன், அதஞல் உண்டான பாவங்களேப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நா னம் செய்ததால் போக்கடித்துக் கொண்டான்.

உதயத்திற்கு முன் இரண்டு நாழிகைகளுக்கு முன்போ, அல் லது உதயத்திற்கு முன் இரண்டு நாழிகைகள் என்ற ஸந்தியா காலத்திலோ, அல்லது சூரியோ தய காலத்திலோ செய்யப்படும் ஸ்நானம், ப்ராஜாபத்திய கிருச் ரத்திற்குச் சமம். மஹாபாதகத் தையும் அழிக்கவல்லது.

''விருத்ராசுரனேக் கொன்ற தால் இந்திரனுக்குப் பாவம் சம்ப வித்த காலத்தில், தேவர்களும் ரிஷிகளும் கங்கை முதலிய புண் ணிய தீர்த்தங்களில் அவனே ஸ்நானம் செய்யச் சொல்லி, அவ னுடைய பாவங்களேப் போக் கடித்தனர்'' என்று வால்மீகி ராமாயணம் பாலகாண்டம் 24ஆவது ஸர்க்கத்தில் கூறப்பட் டிருக்கிறது.

ஸ்ரீ மஹேச்வரனே பூஜிக்காமல் எந்தக் காரியத்தையும் செய்ய லாகாது. ஈச்வரனுடைய பூஜை யில் ஈடுபட்டிருந்த ச்வேதன் என்ற முனிவரை, (அவருடைய ஆயுள் காலம் முடிந்தும்கூட) யமன் அழைத்துச்செல்ல சக்தி யற்றவஞக ஆஞன். சிவபூஜை யின் மஹிமை அப்படிப்பட்டது.

ச்வேதன் என்று பெயருள்ள ஒரு முனிவர், மிகுந்த பக்தி சிரத் தையுடன் பிரதிதினம் சிவபூஜை செய்து வந்தார். ஒரு சமயம் ஓர் மலேயின் குஹையில் அவர் சிவ பூஜை செய்துகொண்டிருக்கை யில், அவருடைய ஆயுட்காலம் முடிந்துவிட்டது. வழக்கம் போல் யமன் அவரை அழைத்துச்செல்ல வந்தான். அக்காலத்தில் அவர் சிவபூஜையில் விசேஷமாக ஈடு பட்டிருந்தார். ஸ்ரீ ருத்ரம் முத லிய மஹா மந்திரங்களால், பர மேச்வரனேத் துதித்துக்கொண் டிருந்தார். ஆதலால் யமன் பல வாருக முயற்சிசெய்தும், அவரை இழுத்துச் செல்ல முடியாமல் வெறுங் கையுடன் திரும்பிச் சென்ருன் என்று லிங்க புராணம்

பூர்வார்த்தம் 30வது அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஆதலால், யமனை ஜயித்து யம பயத்தை அகற்றக் கூடியவரும், அனைவருக்கும் போகத்தையும் மோக்ஷத்தையும் அளிக்கக் கூடியவருமான சங்கரனை, பக்தியுடன் பூஜை செய்யவேண்டும்.

சிராத்தத்தை சிரத்தையுடன் கூட சாஸ்திரங்களில் கூறப்பட்ட முறைப்படியே செய்யவேண்டும். எல்லாமறிந்த பீஷ்மர், சிராத்தத்தில் பிண்டப்பிரதான காலத்தில், கொடுக்கவேண்டிய பிண்டத்தைப் பூமியில் தர்ப்பங்களைப் பரப்பி அவற்றின் மேலேயே வைத்தார். தகப்பனை சந்தனுவின் கையில் கொடுக்கவில்லை.

சிராத்தம் என்ற சொல்லே, சிராத்தத்திற்கு சிரத்தை மிக அவசியம் என்பதைக் குறிப்பிடுகின்றது. சிரத்தை என்றால் குருவின் மொழிகள், வேத வாக்குகள் முதலியவை உண்மையையே உரைக்கின்றன என்ற உறுதி. மற்ற கர்மாக்களைவிட பித்ருகர்மாக்களை அவ்வித உறுதியுடனேயே செய்ய வேண்டுமாதலால், அவையெல்லாம் சிராத்தம் என வழங்கப்படுகின்றன.

ஆதலால், அவை சாஸ்திரங்களில் கூறப்பட்ட முறை கொஞ்சங்கூடத் தவறாமல் அனுஷ்டிக்கப்படவேண்டும். காலநியமம், தேசநியமம், கர்த்ரு நியமம், போக்த்ரு நியமம், திரவிய நியமம் முதலிய பல நியமங்கள் அவற்றிற்குண்டு. அவை எல்லாவற்றிற்கும் சாஸ்திரங்களையே ஆதாரமாகக் கொள்ளவேண்டும். பிரத்யக்ஷம் முதலிய வேறு பிரமாணங்களைப் பின்பற்றலாகாது.

பீஷ்மர் ஒருசமயம் பித்ருசிராத்தம் செய்தார். அப்பொழுது அவருக்குள்ள சாஸ்திர நம்பிக்கையை பரீக்ஷை செய்வதற்காக, பிண்டப் பிரதான காலத்தில் அவருடைய தகப்பனாரான சந்தனு பூமியைப் பிளந்து கொண்டு கையை நீட்டி, பிண்டத்தைத் தன் கையில் கொடுக்கும்படி கேட்டார். ஆனால் பீஷ்மர் அதை ஏற்றுக்கொள்ளாமல், தகப்பனுடைய கையை அகற்றிவிட்டு, பூமியில் பரப்பப்பட்ட தர்ப்பங்களின்மீதே பிண்டத்தை வைத்தார். சாஸ்திரங்களில் பிண்டத்தைத் தகப்பன் கையில் கொடுக்கும்படி விதிக்கவில்லை. ஆதலால் அவ்விதம் செய்ய பீஷ்மர் துணியவில்லை.

''சாஸ்திரார்த்தத்தை உல்லங்கனம் செய்யப் பயந்து, தகப்பனாருடைய கைதான் என்று நன்கு அறிந்திருந்தும், அதில் எவர் பிண்டத்தை அளிக்கவில்லையோ, அப்படிப்பட்ட பீஷ்மர்'' என்று குமாரிலபட்டர் பீஷ்மரைப் போற்றுகிறார். ஆதலால் சாஸ்திரம் கூறுகின்றபடியே சிராத்தத்தைச் செய்ய வேண்டும்.

உ


திருச்சிற்றம்பலம்

எங்கும்விளங் குவதாகி இன்பமய மாகி,
    என்னுணர்வுக் குணர்வுதரும் இணையடிகள் வருந்த,
பொங்கும்இர விடைநடந்து நானுறையும் இடத்தே
    போந்துமணிக் கதவுதனைக் காப்பவிழ்க்கப் புரிந்து,
தங்கும்அடி யேனை அழைத்(து) அங்கையிலொன்(று) அளித்தே
    தயவினொடு வாழ்கஎனத் தனித்திருவாய் மலர்ந்தாய்!
இங்குநின(து) அருட்பெருமை என்னுரைப்பேன் பொதுவில்
    இன்பநடம் புரிகின்ற என்னுடைநா யகனே!

உள்ளுருகுந் தருணத்தே ஒளிகாட்டி விளங்கும்
    உயர்மலர்ச்சே வடிவருந்த உவந்துநடந் தருளி,
கள்ளமனத் தேன்இருக்கும் இடந்தேடி அடைந்து,
    சதவுதிறப் பித்தருளிக் களித்தெனையங்(கு) அழைத்து,
''நள்ளுலகில் உனக்கிதுநா நல்கினம்நீ மகிழ்ந்து
    நாளும்உயிர்க்(கு) இதம்புரிந்து நடத்தி''யென உரைத்தாய்!
தெள்ளும்அமு தாய்அன்பர் சித்தமெலாம் இனிக்கும்
    செழுங்கனியே மணிமன்றில் திருநடநா யகனே!

—திருவருட்பா

ஸ்வாமி ஸ்ரீ அபேதானந்த மகாப்ரபு



வேலவன்

செல்வங்களுக்கெல்லாம் அதிபதி குபேரன். ஆனால் அவனை யாரும் பிரபு என்று சொல்வதில்லை. காரணம், அந்தச் செல்வங்கள் எல்லாம் அவனுக்குச் சொந்தமானவை அல்ல. கலைமதியால் உமிழப்படுகின்ற நிலவு அனைத்தும், உண்மையில் கதிரவனிடமிருந்து பெற்ற ஒளியே அல்லவா? அதேபோல், குபேரனிடத்துக் காணப்படுகின்ற செல்வங்கள் அனைத்தும், அவனுக்கு இறைவனால் அளிக்கப்பட்ட ஐஸ்வர்யங்களே ஆகும்.

இறைவனுக்கு **ஈஸ்வரன்** என்ற ஒரு பெயர் உண்டு. அந்தப் பெயரிலிருந்துதான் **ஐஸ்வர்யம்** என்ற சொல்லே பிறந்தது. ஐஸ்வர்யம் என்றால், **பிரபுத்தன்மை** என்பது பொருள்.

அதனால்தான், உலகியலில் ஒருவர் எவ்வளவுதான் செல்வம் படைத்தவராய் இருந்தாலும், பிரபு என்னும் பட்டமானது அவரைப் போய் ஒட்டுவதில்லை. ஆனானப்பட்ட குபேரனுக்கே அந்தப் பட்டம் பொருந்தாது என்னும் போது, மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? அந்தப் பட்டத்துக்கு உண்மையிலேயே உரிமை படைத்தவர்கள், இறைவனது அடியார்களைத்தவிர வேறு எவருமே இல்லை. ஏனென்றால், அவர்களிடத்தில்தான் இறைவனுடைய ஐஸ்வர்யங்கள் விளங்குகின்றன.

பக்தர்களுடைய ஐஸ்வர்யம், அவர்களுடைய பாங்குப்புத்தகத்தைப் பார்த்து அறிந்து கொள்ளப்படுவது அல்ல. அரையில் உடுத்துவதற்கு ஒரு முழக் கந்தை அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். அடுத்த வேளை உணவு எங்கே கிடைக்கப்போகிறது என்பது, அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். கையில்திருவோடு ஏந்தி, அவர்கள் தெருவிலே திரிபவர்களாய் இருக்கலாம். எனினும், அவர்கள்தாம் உண்மையான செல்வர்கள். ஏனென்றால், ஐஸ்வர்யங்களுக்கெல்லாம் உறைவிடமான ஈஸ்வரன், அவர்களது உள்ளத்தின் உள்ளே ஆத்ம வடிவமாகவே அமர்ந்திருக்கிறான். உள்ளூற அந்த ஆனந்தத்தை அனு

பவித்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கு, வெளித்தோற்றம் எப்படியிருந்தால் என்ன? நகர் சோதனையின் பொருட்டு இராஜ குமாரன் ஒரு பிச்சைக்காரனைப் போல் வேடம் தரித்துக்கொண்டால், அதற்காக உண்மையிலேயே பிச்சைக்காரன் ஆகிவிடுவானா, என்ன?

பிச்சைக்காரன் இராஜாவேஷம் போட்டாலும், அவன் உண்மையான இராஜா ஆகிவிடமாட்டான். தம் உள்ளத்தை இறைவனது கோயிலாக்கிக் கொள்ளாதவர்கள் எல்லாம், வெளியே அவர்கள் எவ்வளவு பெரிய கோடீஸ்வரர்களாய்க் காணப்பட்டாலும், உண்மையில் அவர்கள் இராஜா வேடம் தரித்த பிச்சைக்காரர்களே ஆவர். அதற்கு அடையாளம், வெளித் தோற்றத்தில் அவர்கள் ஆயிரம்தான் ஆடம்பரமாக வாழ்ந்தாலும், உள்ளூற ஏதேனும் ஒரு கவலையோ பயமோ அவர்களுடைய உள்ளத்தை அரித்துக்கொண்டேயிருக்கும்.

ஆனால், இறைவனுடைய திருநாமங்களைப் பஜித்துக்கொண்டேயிருப்பவர்களுக்கு, உள்ளத்தில் எந்த ஒரு கவலையும் இராது; பயமும் தோன்றாது. காரணம், அந்த நாமங்கள் ஒவ்வொன்றின் உள்ளேயும், ஈஸ்வரது அனந்தமான மங்கள குணங்கள் அடங்கியிருக்கின்றன. அந்த மங்கள குணங்களுக்கே ஐஸ்வர்யங்கள் என்று பெயர். ஈஸ்வரனுடைய திருநாமங்களை நாம் வாயினால் பஜிக்கப் பஜிக்க, உள்ளத்திலே ஐஸ்வர்யங்கள் தாமாகவே ஊற்றெடுத்துப் பெருகுகின்றன. அப்புறம் அந்த உள்ளத்திலே கவலைக்கோ பயத்துக்கோ இடம் எங்கே கிடைக்கும்? அங்கு இடையறாத ஆனந்தம் அல்லவா எப்போது பார்த்தாலும் கொப்பளித்துக் கொண்டு இருக்கும்?

அந்த ஆனந்தத்தைத் தாம்மட்டும் அனுபவிப்பதோடு அமையாது, எல்லோருமே அதனை அடைந்து உய்யவேண்டும் என்று ஆர்வம் கொள்வது ஆன்றோர் இயல்பு. மகாப்பிரபு சைதன்யர், மகாப்பிரபு வல்லபாச்சாரியார் போன்ற பெரியோர்கள் எல்லாம், இப்படித்தான் ஆர்வம் கொண்டிருந்தார்கள். திருவனந்தபுரம் ஸ்வாமி அபேதானந்த மஹாப்பிரபு அவர்களும், இன்று நம்மிடையே வாழ்ந்துகொண்டு இருக்கிற அத்தகைய ஒரு சான்றோர் ஆவர்.

ஸ்வாமிஜி தம் சீடகோடிகளோடு நாம சங்கீர்த்தனம் செய்வதை நேரில் கேட்கும் பேறு, சென்னையில் அண்மையிலே நிகழ்வுற்ற அவர்களது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது எனக்குக் கிட்டியது. ஏறக்குறைய ஓர் அவதூதரைப்போன்ற தோற்றம். வாய் திறந்து பேசாமலே அனைவரோடும் அளவளாவி மகிழ்கின்ற அருள்விழிகள். செவியைக் குளிர்வித்து, உள்ளத்தையும் துள்ளவைக்கின்ற இனிய குரல். அந்தக்குரலின் வளத்தினால் அழகு பெற்று விளங்கும் அருமையான சங்கீத ஞானம். இந்த உபகரணங்களையெல்லாம் பரிவாரங்களாகக் கொண்டு, பகவானுடைய நாமங்கள் அவருடைய திருவாக்கிலிருந்து வெளிப்படும்போது, அந்த இடத்தில் ஒரு தெய்விக ஸாந்நித்யம் தானாகவே ஏற்பட்டு விடுகிறது. அங்கு சூழ்ந்திருக்கும் எல்லோரையும் அது பரவசப்படுத்துகிறது. அதுவரையில் தம் வாயினால் பகவந் நாமத்தைச் சொல்லியறியாதவர்கள் எல்லாம் அப்போது தம்மையும் அறியாமல்

சொல்லத் தொடங்குகிறார்கள். அப்படி வெளியே வாய் விட்டுப் பாடுவதற்கு வெட்கப்படுபவர்கள், தம்உள்ளத்தாலேயேபாடத் தொடங்குகிறார்கள். நாத்திகர்கள்கூட, தம் இதயமானது இறைவனை நோக்கிக் குரல் கொடுக்க முற்படுவதை உணருகிறார்கள். அந்த அளவுக்கு ஆற்றல் வாய்ந்ததாய் இருக்கிறது ஸ்வாமி அபேதானந்தரின் நாமசங்கீர்த்தனம்.

ஸ்வாமிஜியின் ஆசிரமம் திருவனந்தபுரத்தில் இருக்கிறது. அங்கு அல்லும் பகலும், அறுபது நாழிகையும், அகண்ட பஜனை நடந்து வருகிறது. ஸ்வாமிஜி பல்வேறு மொழிகளிலும் பஜனைப் பிரசங்கங்கள் செய்கிறார். பாரத நாட்டின் பல்வேறுபாகங்களிலும் யாத்திரை செய்து, மக்களின் உள்ளத்திலே பக்தியின் வித்துக்களை வாரி வாரி விதைத்திருக்கிறார். இன்னும் விதைத்துக் கொண்டு இருக்கிறார்.

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்சான்றோராகிய இந்த ஞானக்கடல், இந்த பக்திக்கடல், நம் நாடும் மக்களும் நலம்பெறும் பொருட்டு, தன்னுடைய நாம சங்கீர்த்தனப் பேரலைகளால் இன்னும் பல்லூழிகாலம்நம்மிடையே இடையறாது முழங்கிக் கொண்டிருக்குமாறு, இறைவன் இன்னருள் புரிவாராக! ●



தண்டாயுதபாணி பிலிம்ஸ் அளிக்கும்
தேவரின்
துணைவன்
பிற்பகுதி ஈஸ்ட்மென் கலரில்
சென்னை
பிளாசா
அகஸ்தியா (70MM)
ராக்ஸி
ராம் மற்றும்
தென்னாடெங்கும்
கதை, வசனம் பாலமுருகன்
டைரக்ஷன் M.A. திருமுகம்
தயாரிப்பு
சாண்டோ M.M.A. சின்னப்பாதேவர்
MARS

காணக் கண் கோடிவேண்டும்



ஸ்ரீ முருகா
தண்டபாணி

''கள்ளார்ந்த பூங்கொன்றை
மதமத்தம் கதிர்மதியம்

உள்ளார்ந்த சடைமுடியெம்
பெருமானுர் உறையும் இடம்

தள்ளாய சம்பாதி
சடாயென்பார் தாமிருவர்

புள்ளானுர்க்(கு) அரையனிடம்
புள்ளிருக்கு வேளூரே!''

இது வைத்தீஸ்வரன் கோயில் என்னும் திருத்தலத்துக்கு உரிய தேவாரப் பாசுரம். இந்தப் பாசுரத்தில், புள்ளிருக்கு வேளூர் என்னும் பெயரால் இத்திருத்தலம் குறிப்பிடப்பட்டு உள்ளது.

புள்ளிருக்கு வேளூர் என்னும் பெயர் இதற்கு எப்படி வந்தது?

புள் என்ருல், பறவை.

இருக்கு என்பது, நான்கு மறைகளுள் ஒன்று.

வேள் என்ருல், முருகப் பெருமான்.

சம்பாதி, ஜடாயு என்னும் பறவைகளும், இருக்கு என்னும் வேதமும், முருகப் பெருமானும், இங்குள்ள சிவலிங்கத்தை வழிபட்டு, தம்மை வழிபாட்டுக்கு உரியவர்களாக ஆக்கிக் கொண்டனர். அதனுலேயே இந்தத் தலத்திற்குப் புள்ளிருக்குவேளூர் என்று பெயர் வந்தது.

சீதையை இராவணன் தூக்கிச் செல்லும்போது, அவனது புஷ்பக விமானத்தை ஒரு கழுகுவந்து தடுத்து நிறுத்தி, அன்னையை மீட்பதற்காக அவனேடு கடும் போர் புரிந்தது. இராவணன் வேறு வகையில் வெல்ல முடியாமல், சிவபெருமான் கொடுத்த

தெய்விக வாளினல் அதனை வெட்டி வீழ்த்தினன். இந்தக் கதை இராமாயணத்தில் மிகவும் பிரசித்தமாக உள்ளது.

இராவணனேடு போர் புரிந்த அந்தக் கழுகுக்கு, ஜடாயு என்று பெயர். ஜடாயுவின் அண்ணன் சம்பாதி. இவ்விருவரும் பூசித்த இடமே வைத்தீஸ்வரன் கோயில்.

தஞ்சை மாவட்டத்தில், சீகாழிக்குத் தென்மேற்கே மூன்றரைக் கல் தொலைவில் இந்தத் திருத்தலம் இருக்கிறது. இங்கு கோயில் கொண்டருளியிருக்கும் சிவபெருமானுக்கு வைத்யநாதர் என்று பெயர். அம்பிகையின் பெயர் தையல் நாயகி. முருகன் பெயர் முத்துக் குமாரஸ்வாமி.

அப்பர், சம்பந்தர் ஆகிய இருவரும், இங்குள்ள சிவபெருமானைப் போற்றித் தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளார்கள். அருணகிரி நாதர் குமரனைப் போற்றித் திருப்புகழ் பாடியுள்ளார். குமரகுருபர ஸ்வாமிகள், முத்துக் குமார ஸ்வாமி பிள்ளைத் தமிழ் என ஒரு பிரபந்தம் பாடியுள்ளார்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்தத் திருக்கோயிலுக்கு, அண்மையில் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. பல நூருயிரம் பக்தர்கள் வந்து, அந்தக் கண் கொள்ளாக் காட்சியைக் கண்டு, ஆனந்தக் கடலில் ஆழ்ந்து மூழ்கினர்.

இந்தக் கும்பாபிஷேகம் எவ்விதக் குறைபாடும் இல்லாமல் சாஸ்திரோக்தமாக நிறைவெய்துதற்கு, தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எவ்வளவு சிரத்தை யெடுத்துக் கொண்டு அரும்பாடுபட்டார்கள் என்பதை, வார்த்தைகளால் விவரிக்க இயலாது. இது சம்பந்தப்பட்ட இடையருத உழைப்பின் காரணமாக, அவர்களது உடல் நலமே சிறிது குன்றிப்போய்க் காணப்பட்டது. எனினும் உள்ளம் குன்றவில்லை. அதில் ஊக்கம் ததும்பி நின்றதை, அவர்களது வாக்கிலும் நோக்கிலும் பார்க்க முடிந்தது.

வேத மந்திரங்கள், ஆகம வாக்கியங்கள், தேவாரத் திருவாசகத் திருப்புகழ்ப் பாசுரங்கள் இவையெல்லாம், விண்ணும் மண்ணும் நிறைந்து ஒலித்தன. இன்னிசை நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும், மக்களின் செவிப் புலனில் தேன் மழைபோல் தித்தித்தன. ஹரஹர, சிவசிவ, சம்போமஹாதேவ, நம: பார்வதி பதயே என்னும் பேரொலிகள் வான் அதிர முழங்கின. எங்கு பார்த்தாலும் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

போலீஸ்காரர்கள் கூடக் காலில் செருப்பு இல்லாமல் பணி புரிந்தார்கள் என்ருல், அது எத்தகைய தெய்விகத் திருவிழாவாய் இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

பொதுவாக, மனிதன் தன் வாழ்நாளில் ஒரு கும்பாபிஷேக மகோற்சவத்தைத் தெரிசிக்க வேண்டுமானல், அதற்கு அவன் எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆனல் வைத்தீஸ்வரன் கோயில் மகாகும்பாபிஷேகத்தைக் கண்டு களிப்பதற்கு, நாம் வெறுமே புண்ணியம் செய்திருந்தால் மட்டும் போதாது. நம் அங்கம் எங்கிலும் ஒரு கோடி கண்களையும் பெற்றிருக்க வேண்டும்.

முருகனும் முதல்வனும்

முருகன் என்பதற்கு முருகினை யுடையவன் என்பது பொருள். முருகு என்பதற்கு அழகு, இளமை, மணம், தேன், கடவுள் தன்மை என்பன பொருள்களாம். ஆகவே, ''முருகன்'' என்ற பதம், என்றும் அழியாத அழகினையுடையவன் என்றும், என்றும் மாருத இளமையினை உடையவன் என்றும், என்றும் நீங்காத நறுமணத்தை யுடையவனென்றும், தேன் போன்று இனிக்கிறவனென்றும், பரிபூரணக் கடவுள் தன்மை நிறைந்துள்ளவன் என்றும் பொருள் படுகிறது. நம்முடைய அழகு, இளமை முதலியன என்றும் நிலைபெற்று நிற்பவையல்ல. ஆனல், முருகன்றன் அழகு, இளமை முதலியனவோ என்றும் நிலைபெற்று நிற்பன.

இன்னும் முருகனுக்கு வேறு பெயர்களும் உண்டு; இவருக்கு **குகன்** என்ற ஒரு பெயர் உண்டு. இப் பெயர் மலைக்குகையில் வசிப்பவன் என்று பொருள் படினும், அன்பர்களது உள்ளமாகிய குகைகளில் உறைபவன்என்று பொருள் படும். **சுப்பிரமணியன்** என்ற பெயர், சுத்த பிரமத்தினின்றும் தோன்றியவன் எனப் பொருள் படும். **குமாரன்** என்ற பெயர் அழகில் மன்மதனை ஜயித்தவன் எனப் பொருள்படும் **ஸ்கந்தன்** என்ற பெயர், ஞானத்தைத் தருபவன் என்று பொருள்படும். **சச்சிதானந்தன்** என்ற பெயர், சத்தும் சித்தும் சேர்ந்தவழி பிறக்கும் ஆனந்த வடிவினன் என்று பொருள்படும். இவருக்கு **வேலாயுதன், சண்முகன்** முதலிய பல் வேறு பெயர்களும் உண்டு.

ஆறு முகங்கள், பன்னிரண்டு கரங்கள், அழகிய கூர்மையான வடிவேல் இவற்றைக்கொண்டு, வள்ளி, தெய்வயானை என இரு சக்திகள் சமேதராய் விளங்குவதே முருகனது உருவத்தோற்ற அமைப்பாம். வள்ளிநாயகி அம்மையார் இச்சா சக்தியாகவும், தெய்வயானை அம்மையார் கிரியா சக்தியாகவும், வடிவேல் ஞான சக்தியாகவும் முருகனிடம் திகழ்கிருர்கள்.

பரமேசுவரனுக்குள்ள ஐந்து முகங்களோடு அதோ முகத்தினையும் கொண்டு, முருகன் ஆறுமுகனாயினன். சிவத்துக்குரிய ஐந்து முகங்களையும், சக்திக்குரிய ஒரு முகத்தினையும் கொண்டு ஆறுமுக

ஞயினன் எனவும், நான்கு திசைகளையும் மேல் கீழிடங்களையும் நோக்கி அனைத்தையும் பரிபாலனஞ் செய்ய இறைவன் ஆறுமுகஞயினன் எனவுங் கூறுப.

துவார பாலகர்கள் யார்? அவர்களை ஏன் வணங்கவேண்டும்? இவர்கள் ஆண்டவன் சந்நிதிக்கு மெய்க் காவலாளர்கள். ஆண்டவனிடம் பக்தி விசுவாசம் கொண்டவர்கள். சாதாரண அதிகாரிகளைக் காண வேண்டுமென்றாலே வாசலில் உள்ள காவலாளர்களின் உத்தரவைப் பெறுகிறோமல்லவா? அதேபோல, உலகத்திற்கெல்லாம் தலைவரான இறைவனைக் காணச் செல்லும்போது, மெய்க்காவலர்களிடம் உத்திரவு பெற்றுக் கொண்டுதானே செல்ல வேண்டும்? அவர்களிடம் உத்திரவு கேட்கும் முறையாவது: ''அடியேன் உட்சென்று இறைவனை வணங்குவதற்கு, அநுமதி செய்தருளும்'' என்பதாகும்.

நடராஜர் திருவுருவத்தின் அமைப்புகளாவன:- இவ்வருள் திருமேனி, ஒரு மனிதன் நடனமாடும் ரூபமாக அமைந்திருக்கிறது. வலக்காலைக் கீழே ஒரு அரக்கன்மேல் மிதித்து, இடக்காலை மேலே உயர்த்தி, ஓர் இடக்கையால் தூக்கிய பாதத்தைக் காட்டி, மற்றைய இடக்கையால் அக்கினி தாங்கி, ஒரு வலக்கையை அபய ஹஸ்தமாக வைத்து, மற்றொரு வலக்கையில் உடுக்கையினைப் பிடித்து நிற்பதாக இத் திருவுருவம் அமைந்துள்ளது.

அணுக்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்ற மேல்நாட்டு விஞ்ஞானிகள், அணுக்களெல்லாம் ஏக தாளத்தில் ஆடிக் கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டு, அதற்குரிய காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க, காரணம் காண முடியாது கலங்கினர். அதன்பின், நமது தெய்வம் நடனமாடிக் கொண்டிருக்கிறது என்பதைக் கேட்டு வியந்த அந்த விஞ்ஞானிகள், இங்கு வந்து இதனைக் கண்டு சென்றுள்ளார்கள். அணுக்கள் இயங்க அண்டங்கள் இயங்குகின்றன. அண்டங்களை இயக்க ஆண்டவனும் நடன மூர்த்தியாயிருக்க வேண்டும். ஆதலினாலேயே நடராஜர் திருமேனி நடனமாடும் ரூபமாக விளங்குகிறது. மனிதர்களுடைய நோக்கம், துக்கம் நீங்கிச் சுகம் அடைய வேண்டும் என்பதேயாகும். நாம் ஆனந்தமடைய ஆனந்த மூர்த்தியை வணங்குதல் வேண்டும். அவர் ஆனந்த நடனம் புரிவதால் எப்பொழுதும் ஆனந்தத்தோடு விளங்குகிறார் என்பதுதெரிகிறது.

பொன்னம்பலவாணன் திருக்கூத்து, உலகுயிர்க்கு வேண்டும் ஐம்பெரும் தொழிலினைக் குறிப்பது. ஐம்பெரும் தொழில்களாவன: படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்பன. அவற்றுள் முன்னைய மூன்று உலகு, உடல்களில் நிகழ்வன. பின்னைய இரண்டும் உயிர்களில் நிகழ்வன. இவ்வுண்மையினை உணர்த்தவே, அவற்றை முறையே கைகளிலும் கால்களிலும் வைத்துக் காட்டுகின்றனன். நாத தத்துவத்தினின்றும் உலகமுண்டாகிறது என்னும் உண்மை, வலக்கையில் காணும் ஓசை தரும் உடுக்கை அடையாளத்தால் விளங்குகின்றது. வலப்பால் மற்றோர் திருக்கை அஞ்சேலென்றருளும் அடையாளத்தால் காத்தலும், இடக்கையில் காணும் தீச்சுடரின் அடையாளத்தால் துடைத்தலும் ஆம் என்ப. இடப்புறத்துக் கீழ்க்கரம்

குஞ்சிதபாதமாகிய இடது திருவடியைக் காட்டுகின்றது. அது, ''பிறவிப் பெரும் பிணியில் வருந்தும் உயிர்களே! உங்கள் பிறவியை நீக்கிப் பேரானந்தப் பெருநிழல் தருவம்; இங்கே சரண் புகுங்கள்'' என்னும் அநுக்கிரகத்தைக் காட்டுகின்றது. முயலகன் மாட்டு ஊன்றிய வலத் திருவடியால் மறைத்தலும், எடுத்தருளும் இடத் திருவடியால் அருளலும் புலனாகும். இவ்வுண்மை,

''தோற்றம் துடியதனில்,
தோயும் திதியமைப்பில்

சாற்றியிடு மங்கியிலே
சங்காரம்—ஊற்றமா

ஊன்று மலர்ப்பதத்தில்
உற்றதிரோ தம்முத்தி

நான்ற மலர்ப்பதத்தே நாடு.''

என்னும் உண்மை விளக்கம் முப்பத்தைந்தாம் திருப்பாட்டால் காண்க.

அறிவும் அன்பும்



மகான் காந்தியடிகள்

உலகிலே அதியற்புதமான செயல்கள் அனைத்தும், வெறும் மனித முயற்சியால் செய்யப்படுவதில்லை. உரிய காலத்தில் அவை தாமாகவே வருகின்றன. ஆண்டவன் தம் வழியிலேயே அதற்குரிய கருவிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

நம்மைச் சுற்றிலும் காணப்படுபவை நிகழ்பவை அனைத்தும் அநித்தியமானவையும் நிச்சயமற்றவையுமே ஆகும். இவற்றுள் எல்லாம் மறைந்து நிற்கும் பரம்பொருள் ஒன்றே நிச்சயமானதாகும்!

என் முயற்சிகளையெல்லாம் அநீதிகள் அனைத்துக்கும் அடிப்படையான வேர்மீதே பிரயோகிக்கிறேன். வேரைச் சரியாகத் தோண்டி எறிந்துவிட்டால், கிளைகள் எல்லாம் தாமாகவே கீழே விழுந்துவிடும். அதனால், பொது மக்களின் கவனத்தை வேரை விட்டுக் கிளைகளின்மீது திருப்புவது, வேருக்கு மீண்டும் புத்துயிர் உண்டாக்குவதாகவே முடிந்துவிடும்.

நான் கடவுளுக்குப் பயந்தவன். அவனுக்குட்பட்ட எந்த ஜீவனுக்கும் அபாயம் என்பதே இல்லை. இது அவன் கட்டளை! இதை நான் முதலில் நம்புகிறேன்.

கைம்மாறு கருதாமல் நாமே துன்பத்தை மேற்கொண்டால், நமது அழுகை விண்ணுலகிற்கும் எட்டும். கடவுள் அதைக் கேட்டு அருள் புரிவார். இதுதான் மதத்தின் உண்மையான பாதையாகும்.

அறநெறியே அனைத்திற்கும் அடிப்படையானது, சத்தியமே அறநெறியின் சாராம்சம்.

அதர்மம் அறநெறிக்குத் தலை பணிகிறது. எங்குமே அதர்மம் பெருகியிருந்த போதிலும், தர்மம் தனது உன்னத ஸ்தானத்திலிருந்து தவறக் கூடாதென்றே அந்த அதர்மமும் எதிர்நோக்குகிறது.

அன்பு நெறியான அரசியலை அறவாழ்வின் முன்னேற்றத்திலிருந்து பிரித்துவிட முடியாது.

அறிவியல் வாதந்தான் சர்வ சக்தி வாய்ந்தது என்று கருதுவதானது, கல்லும் மரமுமே கடவுள் என்று கருதிக் கும்பிடுவது எவ்வளவு மதிமோசமான செயலோ, அவ்வளவு மோசமானது!

அறிவியல் வாதம் என்பது சர்வ சக்தி வாய்ந்தது என்று

ஒருவன் தன்னைப் பெருமைப் படுத்திக்கொள்ளும்போது, அது அகோர உருவமெடுக்கும் ஒரு பிசாசாகி விடுகிறது!

அறிவாளிகளுள் தலை சிறந்த அறிவாளி சங்கரர். அவருடைய அறிவியல் வாதத்தை வெல்லக் கூடியது உலக இலக்கியத்திலே எதுவுமில்லை.

நம்மிடமுள்ள அறிவு ஒளியின் உதவிகொண்டே நாம் ஒவ்வொருவரும் நடக்கலாம்.

குற்றத்தை மறைப்பதற்கு ஒருவனுடைய புத்திக் கூர்மையை உபயோகப் படுத்தலாமென்று தெரிந்தது. உடனே புத்திக் கூர்மைமீதே எனக்கு அருவருப்பு உண்டாயிற்று!

தேவைப்படாத இடத்தில் ஒரு பொருளைக் கீழே விட்டெறிந்து விட்டால், அது குப்பையாகிறது. அது போலவே, அறிவைத் தீய பாதையில் செலுத்தும்போது, அதுவே பித்தாகிவிடுகிறது.

புத்தகப்படிப்பின் மூலம்தான் அறிவுக் கூர்மையை வளர்த்துக் கொள்ள முடியும் என்ற எண்ணமானது, அடிப்படையிலே தவறாகும்.

எதைக் கைக்கொள்வது, எதைப் புறக்கணிப்பது என்று தானாகவே தெரிந்து கொள்ளும் பகுத்தறிவு பெற்றால் மட்டும், மாணவர்களுக்குப் போதுமானது. அவர்களுக்கு அந்தப் பகுத்தறிவு வளர்ச்சியை ஊட்டுவது ஒன்றுதான் உபாத்தியாயர்களின் கடமை ஆகும்.

அறிவு பெற்றதன் முடிவான பலன், அது ஒழுக்கத்தை வளர்ப்பதுதான்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையில் தொழிற்படச் செய்வதே, அறிவிற்கு உண்மையான அபிவிருத்தி என்பது என்கருத்து. அறிவும் உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும்போது, இதய தத்துவத்திற்கும் ஒரு விழிப்பு ஏற்பட வேண்டியது அவசியமாகும்.

இன்றைய நிலைமையில், நம்முடைய மனைவிமார்கூட நம்முடைய அறிவியல் வாழ்க்கையில் பங்கு பெற முடியவில்லை.

உண்மையான இதயப் பயிற்சி இல்லாமல் வெறும் அறிவுப் பயிற்சி மட்டுமே இருப்பதனால் ஒரு பலனுமே இல்லை.

ஆடவன் தன்னிடம் இருப்பதாக அகம்பாவம் கொண்டிருக்கிற உன்னத அறிவைவிட, பெண் ஒருத்தியின் உள்ளுணர்வே உண்மையானதாகும்!

ஒவ்வொருவனிடமும் மனித வர்க்கத்திற்கு இயற்கையான ஓர் அன்புப் பண்பு உண்டு!

அன்பு என்பதற்கு மதம் — சாதி — இனம் என்கிற வேறுபாடுகள் எதுவும் கிடையாது.


அன்பு என்பது ஒரு போதும் கேட்பதில்லை! எப்போதுமே கொடுக்கும்!

உண்மையான அன்பை வெறும் வாய்ப்புகழ்ச்சியின் மூலமாக மட்டும் காட்டிவிட முடியாது. செயலின் மூலமே அதைக்காட்ட முடியும்.

எனக்கு இதமளிக்கும் அன்பை விரும்புகிறேனே தவிர, என்னை அமுக்கி மூழ்கடித்து விடும் அன்பை விரும்பவில்லை!

உங்களுடைய எதிரிகளிடமும் நீங்கள் அன்பு செலுத்த வேண்டும்!

அன்பு என்னும் ஆட்சியிலே எதை முன்னிட்டும் பலாத்காரமோ கொலையோ இடம் பெற முடியாது!



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த.
புதுமை மாருத. ருசியை
அனுபவிககின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க
பானங்கள் அருந்துங்கள்.
Kali mark
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

துக்கம் எப்போது நீங்கும் ?



புத்தர் பெருமான்

அந்தோ! இப்போது நீ வெளுத்து உலர்ந்த சருகாகி விட்டாய். மரண தூதர்கள் உன்னருகில் வந்திருக்கிறார்கள். மரணத்தின் தலை வாசலுக்கே நீ வந்து நிற்கிறாய். ஆனால் வழிப் பிரயாணத்திற்கு வேண்டிய உணவு எதுவும் இன்னும் நீ தயாரித்துக் கொள்ளவில்லை.

உள்ளும் புறமும் தற்காப்புகளுடன் நன்கு காவல் புரியப்படும் எல்லைப்புறக் கோட்டையைப் போல், ஒருவன் தன்னைக் காத்துக் கொள்வானாக!

நிலையாமையைப் பற்றிச் சிந்தி; தற்செருக்கு அழிந்து போகும்.

தியானத்தின் மூலம் ஞானம் கிடைக்கிறது; தியானத்தின் குறைவால் ஞானம் குன்றிவிடுகிறது.

திருப்திதான் பெருஞ்செல்வம்!

தீமை புரிபவன் இந்த உலகில் துன்புறுகிறான்; மறுமையிலும் துன்புறுகிறான்; இரண்டிலும் அவனுக்குத் துன்பமே. தான் செய்த தீமையைப்பற்றி நினைக்கும்போது அவன் துன்புறுகிறான்; தீய பாதையில் செல்லும்போது இன்னும் அதிகமாய்த் துன்புறுகிறான்.

காஷாய ஆடைகளால் தோள்களை மூடிக் கொண்டிருப்பவர்களிலும்கூட, பலர் தன்னடக்கமின்றிச் சீர்கெட்டுப் போயிருக்கிறார்கள். அத்தகைய தீமை புரிபவர்கள் தங்கள் தீச்செயல்களாலேயே நரகத்தை அடைகிறார்கள்.

குற்றமற்ற அப்பாவிகளுக்குத் தீங்கு செய்கிறவன், இந்தப் பத்துவித நிலைகளான துயரங்களில் ஒன்றை அனுபவிப்பான்; கடுமையான வேதனை, வியாதி, உடற் குலைவு, பெரும் விபத்து, சித்தப் பிரமை, அரசாங்க தண்டனை, பயங்கரமான குற்றச்சாட்டு, உறவினர்களை இழத்தல், செல்வம் அனைத்தின் இழப்பு, நெருப்பாலோ இடியாலோ அவன் வீடு எரிந்து போதல். மரணத்தின்போதும் அந்த வறட்டு மூடன் துக்கத்தில்தான் மறுஜனனம் காண்கிறான்.

கருத்துடைமையில் களிப்புறு: உன் எண்ணங்களைக் கட்டிக் காத்துக் கொள்; சோர்வுறுதே; சேற்றில் விழுந்த யானையைத் தூக்கி விடுவது போல், உன்னைத் தீய வழியிலிருந்து மீட்டுக்கொள்.

வெளிப்புறத்தைக் கழுவியது போதும்! உட்புறத்தைக் கழுவுவதே எனக்குத் தேவை!

சகல துக்கங்களுக்கும் காரணம் ஆசை அல்லது வேட்கைதான்.

ஆசையை அழித்துவிடுவதே துக்க நிவாரணம் என்பது.

துவேஷத்திற்குச் சமமான வியாதி வேறெதுவுமில்லை.

'என்னைத் திட்டினன்; என்னை அடித்தான்; என்னைத் தோல்வியுறச் செய்தான்; என்னிடம் திருடினன்'—இது மாதிரியான எண்ணங்களை இறக்குமதி செய்பவரிடையே, துவேஷம் என்பது ஒருபோதும் நீங்காது.

'இங்கே நாமெல்லாம் கடைசியில் ஓர் இறுதி நிலைக்கு வந்தே தீரவேண்டும்' என்பதை, உலகம் அறிவதில்லை. ஆனல் இதை அறிந்தவர்களுக்கோ, அவர்கள் சண்டை சச்சரவுகளெல்லாம் உடனே தீர்ந்து விடுகின்றன.

தர்ப்பைப் புல்லைத் தவருகப் பற்றியிழுத்தால், அது கையைக் கிழித்து விடுகிறது. அது போலவே, தீய வழியில் அனுஷ்டிக்கும் துறவறமும் ஒருவனை நரகத்திற்கு வழி நடத்துகிறது.

இவ்வுலகில் இருபுறமும் உள்ளதைச் சீர்தூக்கிப் பார்ப்பவனே துறவியாவான்.

மூடனுன துறவி, போலியான கீர்த்தியை விரும்புகிறுன். துறவிகளிடையே முதன்மையானவனுக வும், துறவற மடங்களிலே தலைவனுகவும் இருக்க வேண்டுமென்றும், இல்லறத்தார் தன்னை வணங்க வேண்டுமென்றும் விரும்புகிறுன்.

எவன் மன மாசுகளிலிருந்து தன்னையே சுத்தி செய்து கொள்கிறுனே, எவன் சகலவிதமான நற்பண்புகளிலும் நன்கு நிலைத்து நிற்கிறுனே, எவன் சத்தியத்தையும் நிதானத்தையும் கடைப் பிடிக்கிறுனே, அவனே காஷாய ஆடைக்கு அருகதை உள்ளவன்.

எவன் தன்னையே மன மாசுகளிலிருந்து சுத்தப்படுத்திக் கொள்ளாமலும், சத்தியத்தையும் நிதானத்தையும் பொருட்படுத்தாமலும் காஷாய ஆடை தரிக்க விரும்புகிறுனே, அவன் அந்தக் காஷாய ஆடைக்குத் தகுதியானவன் அல்ல!

பாச பந்தங்கள் அனைத்தையும் அறுத்தெறிந்து விடுதலை பெற்றவனுக்கு, மனத்தின் எல்லாவித விலங்குகளையும் உடைத்தெறிந்தவனுக்கு, துன்பம் என்பதே இல்லை!

நீண்ட காலம் துன்பத்தைத் தாங்கும் சகிப்புத் தன்மையே முதன்மையான தவம். பிறரைத் துயர்படுத்துகிறவன் சந்நியாசியல்ல; பிறருக்குத் தவறு செய்கிறவன் துறவியல்ல.

மனம், வாக்கு, காயம்—இம் மூன்றிலும் பிறருக்குத் துன்பம் செய்யாமல், இம்மூன்றையும் கட்டியாள்பவனையே பிராமணன் என்பேன்.

மகாகவி பாரதியார் பொன்மொழிகள்

இப்போது பழைய யுகம்மாறிப் புதிய யுகம் தோன்றப் போகின்றது. அந்தப் புதிய யுகம் தெய்வ பக்தியையே மூலாதாரமாகக் கொண்டுநடைபெறப்போகிறது. ஆதலால், அதில் ஹிந்துக்கள் தலைமை பெறுவார்கள். இது ஸத்யம்.

''நான் என்றோர் தனிப் பொருள் இல்லை. நான் எனும் எண்ணமே வெறும் பொய்'' என்றான் புத்தன். இறைஞ்சுவோம் அவன் பதம்.

புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள்.

புராணங்கள் முழுதும் சரித்திரமல்ல; ஞான நூல்கள். யோக சாஸ்திரத்தின் தத்துவங்களைக் கவிதை வழியிலே கற்பனைத் திருஷ்டாந்தங்களுடன் எடுத்துக் கூறுவன. இவையன்றி, நீதி சாஸ்திரத்தை விளக்கும்படியான கதைகளும், அந்நூல்களில் மிகுதியாகச் சேர்ந்திருக்கின்றன. சரித்திரப் பகுதிகளும் பல உண்டு. இவ்வாறு பலஅமிசங்கள் சேர்ந்து ஆத்ம ஞானத்துக்கு வழி காட்டி, தர்ம நீதிகளை மிகவும் நன்றாகத் தெரிவிப்பதால், அந்த நூல்களை நாம் மதிப்புடன் போற்றி வருதல் தகும்.

அன்பால் செய்யப்படும் உபசாரங்களே பூஜைகள்எனப்படும்.

தவங்களில் உயர்ந்தது பூஜை, மனத்தைத் தீய நெறியில் செல்ல விடாமல் தடுப்பதற்கு மிகவும் சுருக்கமான உபாயம், அதனை நன்னெறியிலே செலுத்துதல். மனத்தைச் செலுத்துதற்குரிய நன்னெறிகள் அனைத்திலும்உயர்ந்தது பூஜை.

சுகமாக வாழ்வோனைக் கண்டு நீ பொறாமைப் படாமல், அவனிடம் நட்பு செலுத்த வேண்டும்.

நாம் ஒருகாரியத்தைச் செய்யாமலிருக்குமிடத்து, அதைப் பிறர் செய்யும்போது அசூயை கொள்வது தவறு.

உன்னைக் கேட்டா நீ பிறந்தாய்? எந்த விஷயத்துக்கும் நீ ஏன் பொறுப்பை வஹித்துக் கொள்கிறாய்?

பொறாமை எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ, ஒருவனுக்கு அத்தனைக்கத்தனை வியாபாரம் தொழில் முதலியவற்றில் வெற்றியுங் குறையும். அவனுடைய லாபங்களெல்லாம் குறைந்து கொண்டே போம்.

பொறுமையில்லாதவனுக்கு இவ்வுலகத்தில் எப்போதும்துன்பமேயன்றி, அவன் ஒருநாளும்இன்பத்தைக் காணமாட்டான். ஒருவனுக்கு எத்தனைக் கெத்தனை பொறுமை மிகுதிப் படுகிறதோ, அத்தனைக்கத்தனை அவனுக்கு உலக விவகாரங்களில் வெற்றியுண்டாகிறது.

பொறுமையை ஒருவனுக்குச் சமைத்துக் கொடுக்கும் பொருட்டாகவே, அவனுடைய சுற்றத்து மாதர்களும், விசேஷமாக அவன் மனைவியும், அவனுக்கு எதிர் மொழிகள் சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள்.

அறிவுடையோரையும், லோகோபகாரிகளையும், வீரரையும் கொண்டாடாத தேசத்தில், அறிவும், லோகோபகாரமும், வீரமும் மங்கிப் போகும்.

எந்த நாட்டிலே புதிய மஹா கவி தோன்றுகிறானோ, அந்த நாடு மஹா பாக்கியமுடையது.

பூர்விக மகான்களின் ஞாபகத்தைத் தீவிரமான பக்தியுடன் வளர்க்காத நாட்டில், புதிய மகான்கள் பிறக்க வழியில்லை.

உலகத்திலுள்ள மதபேதங்களையெல்லாம் வேருடன் களைந்து, ஸர்வ ஸமய ஸமரஸக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால், அதற்குத் தமிழ்நாடே சரியான களம்.

மந்திரம் வலிமை!

வலிமை கொண்ட மந்திரங்களாலே, அதாவதுமனோநிச்சயங்களாலே, மனிதன் இவ்வுலகத்தில் அமர நிலையடைகிறான்.

கவலையாலும் பயத்தாலும் மரணமுண்டாகிறது. கவலையும் பயமும் பகைவர்.

நமது காரியம் முடிந்த பிறகுதான் சாவோம்; அதுவரை நாம் சாகமாட்டோம். நம்முடைய தர்மங்கள் நிறைவேறும்வரை நமக்கு மரணமில்லை.

மரணம் வெல்லவில்லை. உயிரே வெற்றியடைந்துகொண்டு வருகிறது.

ஔடதம் குறை!

சாகத்தான் வேண்டுமென்று தீர்ந்தால், அயல்நாட்டு மருந்தினால் சாவதைக் காட்டிலும், நம் நாட்டு முறைப்படி சாவது நல்லது.

ஒவ்வொரு நிமிஷத்திலேயும் ஒருவன் நினைக்கும் நினைப்புகளும், செய்யும் செய்கைகளும், அவன் பலவிதப் பிறவிகளை அடைவதற்குக் காரணமாகின்றன.

மனோதைரியமில்லாத பேடிகள் புழுக்களாகப் பிறப்பார்கள். பிறர் துன்பங்களை அறியாமல் தமதின்பத்தை விரும்பினோர் பன்றிகளாகப்பிறப்பார்கள். சொந்த பாஷை கற்றுக்கொள்ளாதவர் குரங்குகளாகப் பிறப்பார்கள். சோம்பேறிகள் எருமைகளாகப் பிறப்பார்கள்,

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

அருள்

லைச்செல்வி மணிமேகலை

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

இறைவி வணக்கம்

ஸ்ரீமூக மகாகவி

ஸ்ரீ காஞ்சிமா நகரில் விளங்குபவளும், பர்வதங்களுக்கு நிகரான பருத்த நகில் மண்டலங்களை உடையவளும், தாமரை மலர் போன்ற கண்களைப் பெற்றவளுமான இந்தப் பரதேவதை ஸ்ரீ காமாக்ஷீ தேவியால், யாம் ஆட்கொள்ளப் பட்டு விட்டோம்.

போற்றற்கு உரிய காஞ்சி நகரத்தில் வாழ்ந்திருப்ப வளும், எழில் மிகுந்த யௌவன கர்வத்தோடு விளங்கு பவளும், ஆகமங்களின் சிரசிலே திகழும் அரும்பு போன்ற வளும், நித்தியானந்த அத்வைதக் கொழுந்தாய் இலங்கு பவளுமான ஆதி சக்தியை வணங்குகிறேன்.

மாமரத்தின் அடியில் வைகும் ஆதிசிவன் கண்களுக்கு அமிருத வடிவாய்க் காட்சியளிப்பவளும், யௌவனப் பரு வத்தின் துவக்க காலத்தில் உதிக்கின்ற ஆனந்த உல்லாசத் தையே தன் வடிவமாகக் கொண்டவளும், சகல வேதங் களுக்கும் உட்பொருளாய் விளங்குபவளுமான அந்தப் பரதேவதையை என் உள்ளத்தால் பற்றிக்கொள்கிறேன்.

திருச்சிற்றம்பலம்

சீரார் சண்பைக் கவுணியர் தம்
தெய்வ மரபிற் றிகழ்விளக்கே !
தெவிட்டா துளத்தில் தித்திக்கும்
தேனே ! அழியாச் செல்வமே !

காரார் மிடற்றுப் பவளமலைக்
கண்ணின் முளைத்த கற்பகமே !
கரும்பே ! கனியே ! என்னிரண்டு
கண்ணே ! கண்ணிற் கருமணியே !

ஏரார் பருவ மூன்றிலுமை
யினியமுலைப்பா லெடுத் தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே !
என்னுருயிருக் கொருதுணையே !

பேரார் ஞான சம்பந்தப்
பெருமா னே நின் திருப்புகழைப்
பேசுகின்றோர் மென் மேலும்
பெருஞ்செல் வத்தில் பிறங்குவரே

திருத்தகுசீ ரதிகையருட் டலத்தி னோங்கும்
சிவக்கொழுந்தி னருட்பெருமைத் திறத்தால், வாய்மை
உருத்தகுமெய் யுணர்ச்சிவடி வாகிச் சைவ
ஒளிவிளங்க, நாவரசென் றொருபேர் பெற்றுப்
பொருத்தமுற உழவாரப் படைகைக் கொண்ட
புண்ணியனே ! நண்ணியசீர்ப் புனிதனே ! என்
கருத்தமர்ந்த கலைமதியே ! கருணை ஞானக்
கடலே ! நின் கழல்கருதக் கருது வாயே.

—திருவருட்பா

அரசத் திருமணம்

மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரை, **அரசக்கோவை** யென்று சொல்லுவார்கள். கோவையெனப் படுகிற பிரபந்தங்களுக்குள்ளே, அது தலை சிறந்ததாய், ஒப்புயர்வற்றதாய் விளங்குவதே அதற்குக்காரணம் ஆகும்.

அதுபோல, தமிழகத்தில் மூவேந்தர் காலத்துக்குப் பிற்பட்ட திருமணங்களுக்குள்ளே, தலைசிறந்ததாய், ஒப்பு யர்வற்றதாய் விளங்கிய ஓர் **அரசத் திருமணம்** உண்டு என்ருல், அதுதான் அண்மையில் (2-7-69 ல் யன்று) பொள்ளாச்சியிலே நடைபெற்ற உயர்திரு மகாலிங்கம் அவர்களது புதல்வியாரின் திருமணம் எனலாம்.

இந்தத் திருமணத்தின் ஒரு முக்கியமான சிறப்பு என்ன வென்ருல், அங்கு வந்திருந்த விருந்தினர்களின் எண்ணிக் கையைக் காட்டிலும், ஏழைமக்களின் எண்ணிக்கையே பெரிதாக இருந்தது. திருமணத்தன்று காலையில் சிற்றுண்டி அருந்திய விருந்தினர்கள் இருபதினுயிரம் பேர் என்ருல், ஏழைகள் முப்பதினுயிரம் பேர். மதிய உணவிலும் அப்படியேதான். இரவிலும்கூட, இருபதினுயிரம் ஏழை களுக்கு மேல் உணவு வழங்கப்பட்டது.

திருமணத்தின் இன்னெரு பெருஞ் சிறப்பு யாதெனில், திருமணத்துக்கு முதல் நாள் தொடங்கி, திருமணத்து

அன்றும், அதற்கு மறுநாளும்கூட, தேவாரம், திருவாசகம், திருவருட்பா இம்மூவகைப் பாசுரங்களையும், ஒலிபெருக்கியில் ஓதுவாமூர்த்திகள் இடையறாது இசைத்துக் கொண்டேயிருந்தனர். இராமலிங்கா மிஷன் தலைவர் வீட்டுத் திருமணம் அல்லவா? அதற்குப் பொருத்தமான முறையில் இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது.

தமிழகத்தில் உள்ள பிரமுகர்கள் அனைவரும் இந்தத் திருமணத்துக்கு விஜயம் செய்திருந்தனர். திரு. மகாலிங்கம் அவர்கள்பால் அன்புபூண்ட பல்லாயிரக்கணக்கான கிராம மக்களும் வந்திருந்தனர். ஒரு லட்ச ரூபாய்க்கும் மேற்பட்ட செலவில், திருமணப் பந்தல்கள் அமைக்கப்பட்டு இருந்தன. முகபடாம் அணிந்த ஏழு யானைகள் வாசலில் அலங்காரமாக நிறுத்தப்பட்டு இருந்தன.

தமிழகத்தில் உள்ள முக்கியமான மடாதிபதிகள் எல்லாம், திருமணத்திற்குத் தத்தம் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தனர். புகழ் படைத்த பல உத்தம சாதுக்களும் வந்திருந்தனர். திரு. மகாலிங்கம் அவர்களுக்குப் பலர் பொன்னாடை போர்த்தினர். ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் வந்து குவிந்திருந்தன.

சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களும் குழுவினரும், சென்னையில் 14-7-69 அன்று நடைபெற்ற திருமண வரவேற்பிலே, அற்புதமான கானவிருந்து வழங்கினர்.

இந்த இதழின் அட்டைப்படத்தில் காட்சியளிக்கும் மங்கலம் புனைந்த மணமக்களான **திருவளர் செல்வி லோக சுந்தரி கருணாம்பாள்** அவர்களுக்கும், **நிறைநாட் செல்வன் முத்துக்கிருஷ்ண சக்திவேல் வானவராயர்** அவர்கட்கும், இறைவன் எல்லா நலன்களும் நிறைந்த நீடூழி இன்ப வாழ்வைத் தந்தருள்வானாக!

பிரம்மசர்யம்



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள்

மாதா பிதாக்களிடத்தில் ஏதாவது பாபதோஷங்களிருந்தால், அவை அவர்களிடத்திலுண்டாகிற ஜீவனையும் பாதிக்கும். அதற்காக, ஒருஜீவன் யாருடைய கர்ப்பத்தில் வாஸம் பண்ணுகிறதோ, எந்தப் பிதாவால் உண்டாகிறதோ, அவர்களுடைய தோஷங்கள் அந்த ஜீவனுக்கு ஏற்படாமலிருப்பதற்காக, ஸமஸ்காரங்கள் செய்யவேண்டும்.

மாதா பிதாக்களிடம் துர்க்குணங்கள் உணடு. அவை அவர்களால் ஏற்படும் ஜீவன்களுக்கு உண்டாகாமலிருக்க, ஸம்ஸ்காரங்கள் செய்யவேண்டும். அந்த தோஷங்கள் கார்ப்பிகம் என்றும், பைஜிகம்என்றும் இரண்டு வகைப்படும். கார்ப்பிகம் தாயால் உண்டாவது. பைஜிகம் தந்தையால் உண்டாவது. இந்த தோஷங்கள் நிவாரணத்திற்காக, உபநயனம் வரையில் உள்ள ஸம்ஸ்காரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைச் செய்யவேண்டியவர்கள் மாதா பிதாக்கள். உபநயனம் வரைக்கும் ஸம்ஸ்காரங்களைச் செய்து கொள்ள, புத்திரனுக்கு அருஹமான வயது வரவில்லை.

உபநயனம் என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன? நயனம் என்றால் அழைத்துக்கொண்டு போவது என்று அர்த்தம். கண்ணுக்கு நயனம் என்று பெயர். அது நம்மை அழைத்துக்கொண்டு போகிறது. அது எப்படித் தெரியும்? கண் இல்லாத பொழுது அது தெரிகிறது. அப்பொழுது ஒருவன் அழைத்துக்கொண்டு போகவேண்டும். அந்தக் காரியத்தைத்ததான் கண்செய்கிறது.

நாயகன் (Leader) அழைத்துக்கொண்டு போகிறவன். உப-சமீபத்தில், நயனம் - உபநயனம் கிட்ட அழைத்துக்கொண்டு போகிறது.

யார் கிட்ட அழைத்துக்கொண்டு போகிறது? ஒருவனைக் குருவுக்கு ஸமீபத்தில் அழைத்துக்கொண்டு போகிறது உபநயனம். குரு யார்? வேதவித்துக்கம். முதல் ஆசிரமத்துக்கு ஒரு குரு; கடைசி ஆசிரமத்துக்கு ஒரு குரு. முதல் ஆசிரம குரு வேதவித். கடைசி ஆசிரமத்துக்குக் குரு பிரம்மவித். வேதவேதாங்கம் அறிந்தவர்கள் முதல் ஆசிரமத்துக்குக் குரு. எல்லாவற்றையும் விட்டு பிரம்மஜ்ஞானம் அடைந்

தவர்கள் கடைசி ஆசிரமத்துக்குக் குரு. வித்தையைத் தெரிந்து கொள்வது முதல் ஆசிரமம். ஞானத்தைத் தெரிந்துகொள்வது கடைசி ஆசிரமம்.

உபநயனம் பிரம்மசரியத்துக்கு ஆரம்பம். அதன் முடிவு ஸமாவர்த்தனம். உபநயனம் முதல் ஸமாவர்த்தனம் வரையில் இருப்பது பிரம்மசரியம். ஸமாவர்த்தனம் என்றால், திரும்பிவருகிறது என்று அர்த்தம். போன இடத்திலிருந்துதான் திரும்பிவரவேண்டும். அல்லவா? ஆகையால், அத்தியயனத்தைப் பூர்த்தி பண்ணிவிட்டு, அகத்திற்கு வருவது ஸமாவர்த்தனம். இதனால், கொண்டுபோய் விட்டது முதல், திரும்பிவருகிற வரையில், அகத்தில் இல்லை என்று தெரிகிறதல்லவா?

அந்தக் காலத்தில் சிஷ்யன் குருஸந்நிதானத்தில் இருக்க வேண்டும். உபநயனம் பூர்வாங்கம். அங்கம் என்றால், பிரதானம் ஒன்று வேண்டும். பிரதானத்திற்கு அங்கி என்று ஒரு பெயருண்டு. அது பிரம்மசரியம். அதற்கென்ன அர்த்தம்? பிரம்ம என்ற பதத்திற்கு ஆறு அர்த்தங்கள் இருக்கின்றன. பிரம்மசரியம் என்றஇடத்தில், பிரம்ம என்பதற்கு வேதம்என்பது அர்த்தம். வேதத்தை ஸ்வாதீனப்படுத்தவே ஒரு ஆசிரமும் ஏற்பட்டிருக்கிறது. அதுதான் பிரம்மசரியம். அதற்குப் பூர்வாங்கம் உபநயனம். அந்த ஆசிரமத்திற்குக் கடைசிப் பக்ஷமாக ஏற்பட்ட காலம் பன்னிரண்டு வருஷங்கள். ஒரு வேதத்தை ஸாங்கோபாங்கமாக அத்தியயனம் பண்ணுவதற்குப் பன்னிரண்டு வருஷங்கள் வேண்டும்.

பிரம்ம என்பதற்கு ஆறு அர்த்தங்கள் உண்டென்பதைச் சொன்னேன். பிரம்மம் என்பது விஷ்ணுவுக்கு ஒரு பெயர். பரமசிவனுக்கும் ஒரு பெயர். பிராம்மண ஜாதி, தபஸ், பரமாத்மஸ்வரூபம் என்பவைகளுக்கு அந்தப் பெயருண்டு. பிரம்மா என்று நீட்டினால் சதுர்முகனுக்குப் பெயராகிறது.

பிரம்மசரியம் என்பது வேதாத்தியயனம் பண்ணுவதற்கேற்பட்ட ஒரு தீக்ஷை. அதற்குப் பூர்வாங்கமாக ஏற்பட்ட ஒரு காரியம் உபநயனம். பரிஷேசனம் ஏற்பட்டது எதற்கு? அது போஜனத்திற்கு அங்கம். உபநயனம் பண்ணிவிட்டு வேதாத்தியயனம் பண்ணமலிருப்பது, பரிஷேசனம் பண்ணிச் சாப்பிடாமலிருப்பதைப் போன்றது.

உபநயனம் என்கிறபூர்வாங்கத்திற்கும், ஸமாவர்த்தனம் என்கிற உத்தராங்கத்திற்கும் நடுவில் நான்கு விரதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை பிராஜாபத்தியம், ஸௌம்யம், ஆக்னேயம், வைச்வதேவம் என்பவை.

வேதம் என்பது மந்திர ஸமூஹம். மந்திரமாகச் சேர்த்து வைத்திருப்பது வேதம். லோகத்தில் எவ்வளவோ மந்திரங்களிருக்கின்றன. ராம மந்திரம், நரஸிம்ம மந்திரம், பஞ்சாக்ஷர மந்திரம், தேள் மந்திரம், பாம்பு மந்திரம், த்ருஷ்டி மந்திரம், ஆபிசார மந்திரம், ஜாலவித்தை மந்திரம், பில்லி சூன்ய மந்திரம் இப்படி எத்தனையோ நல்லவகைகளும் கெட்டவகைகளுமான மந்திரங்களிருக்கின்றன. எந்த மந்திரமானாலும் அதைஉபாஸனை பண்ணி, ஸித்திபெற்றுப் பிரயோ

ஜனம் அடைய வேண்டுமானால், அதற்கென்று ஏற்பட்ட காலத்தில் சில நியமங்களோடு உபாஸனை செய்யவேண்டும். இன்ன நாளில், இன்ன ஸமயத்தில், தூபங்காட்டி, இப்படிப் பண்ண வேண்டும் என்று சில மந்திரங்களுக்கு நியதிஉண்டு. கிரஹண காலத்தில் ஜபிக்க வேண்டிய சில மந்திரங்களுண்டு. எந்த மந்திரத்துக்கும் நியமம் உண்டு. அப்படி நியமத்தோடிருந்தால்தான் மந்திரத்தினால் பிரயோஜனம் உண்டு.

வேதம் மந்திரஸமூஹமாதலால் அதை அத்தியயனம் பண்ணுவதற்குச் சில நியமங்களோடு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த மந்திரங்களால் பிரயோஜனம் உண்டாகும். ஒரு ஜீவன் பிறந்து, வளர்ந்து நன்றாக இருந்து கிருஹஸ்தனாகி, பிரஜைகளை அடைந்து, அவர்களும் கடைத்தேற வழி பண்ணி, தன்னுடைய ஜன்மாவும் கடைத்தேறச் செய்வதற்கு எந்த மந்திரங்களைச் சொல்லிக் கர்மாக்களை அனுஷ்டிக்க வேண்டுமோ, அந்த மாதிரி மந்திரங்கள் சேர்ந்தது வேதம். அப்படி ஒரு சாகையை அத்தியயனம் பண்ணுபவன், சுரோத்திரியன் என்று சொல்லப்படுவான்.

எந்த மந்திரஸித்திக்கும் நியமம் அவசியம் வேண்டும். ஆத்மா கடைத்தேறுவதற்கு வேதம் இருக்கிறது. அதற்கு ஒரு நியமம் வேண்டும். வேத ஸமூஹம் முழுவதற்கும் ஏற்பட்ட நியமம் பிரம்மசரியமாகும். ஒவ்வொன்றுக்கும் தனித்தனி நியமங்கள் இருக்கின்றன. அவ்வளவுக்கும் சேர்ந்து மொத்த விரதம் பிரம்மசரியம். தனித்தனிப் பிரிவுக்குத் தனித்தனி விரதங்கள் இருக்கின்றன.

வேதத்தை நான்கு காண்டமாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளை நாலு மஹரிஷிகள் பிரவர்த்திப்பித்திருக்கிறார்கள். அந்த மஹரிஷிகளை உத்தேசித்து பிரம்மயஜ்ஞம்பண்ணப்படுகிறது. பிரம்மயஜ்ஞம் என்பதற்கு வேதயஜ்ஞம் என்பதுதான் அர்த்தம். ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனியாக ஒரு விரதம் உண்டு. ஒரு காண்டத்தை அத்தியயனம் பண்ணுகிறவரைக்கும், அதற்கு ஏற்பட்ட விரதத்தைப் பண்ணவேண்டும். அந்த விரதத்தைப் பிரம்மசரியத்துக்கு ஏற்பட்ட ஸாமான்ய விரதத்தோடுபண்ணவேண்டும். பிராஜாபத்ய காண்டத்திற்கு ஒரு விரதம் ஏற்பட்டிருக்கிறது. அது பிராஜாபத்தியம். அப்புறம் ஸௌம்ய விரதம். பின்பு ஆக்நேய விரதம். அப்புறம் வைச்வதேவ விரதம் செய்யவேண்டும். நான்கு காண்டங்களும் முடிந்த பின்பு, குருவினுடைய அனுஜ்ஞையின் மேல் ஸமாவர்த்தனம் பண்ணிக் கொள்ளவேண்டும்.

முன்பு சொன்ன நான்கு விரதங்களும் கிருஷ்ணயஜுர் வேதத்துக்கு ஏற்பட்டவை. ருக்வேதத்துக்குக் கோதான விரதம், உபநிஷத் விரதம் முதலிய நான்கு விரதங்கள் உண்டு. கோதானமென்றால் கோவின் ரோமத்தை க்ஷவரம் செய்வது. இப்படி ஒவ்வொரு வேதத்துக்கும் தனித்தனி விரதங்கள் இருக்கின்றன.

ஸமாவர்த்தனத்திற்கு ஸ்நானம் என்று ஒரு பெயர் உண்டு. அதைச் செய்துகொண்டவனுக்கு ஸ்நாதகன் என்றுபெயர். எல்லாரும் ஒரு வேதத்தையும் வித்தைகளையும் அத்தியயனம் பண்ண

வேண்டும். ஆவுணி அவிட்டம் வருகிறது. உபாகர்மா அன்று பண்ணுகிறேம். சிராவணபூர்ணிமையில் அது வரும். அன்று வேதாத்தியயனம் ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். தைமாஸம் பூர்ணிமையில் உத்ஸர்ஜனம் பண்ணவேண்டும். ஆவணிமாதத்தில் ஆரம்பித்து தை மாதத்தில் விட்டுவிடவேண்டும். இந்த ஆறு மாஸத்தில் வேதாத்தியயனம் பண்ணவேண்டும். மற்ற ஆறு மாதங்களில் அங்கங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு மாதத்திலும் சுக்ல பக்ஷத்தில் வேதத்தையும், கிருஷ்ண பக்ஷத்தில் அங்கத்தையும் அத்தியயனம் செய்யவேண்டும். அந்தக் காலங்களல்லாத காலங்களில் ஸந்தை சொல்லலாம். புதிய மந்திரங்களை ஆரம்பித்துக் கொள்ளக்கூடாது.

விதி மார்க்கமும் பக்தி மார்க்கமும்



திருமுருக
கிருபானந்தவாரியார்

ஓர் ஊருக்குப் போகவேண்டுமானால், அதற்கு உரிய வழியைத் தெரிந்து கொள்ளவேண்டும். தெரிந்து கொள்வதுடன், எது எளிய வழியென்றுந் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதுபோல, இறைவனையடைகின்ற வழி யாது என்று தெரிந்து கொள்வது அறிவுடைமையாகும். இதை நாமே ஆய்ந்து அறிவதைக் காட்டிலும், இறைவனையடைந்த ஆன்றோர்கள் கூறும் தமது அனுபவ உரைகளைக் கடைப்பிடிப்பது சாலவும் சிறந்ததாகும்.

அரசாங்கத்தார் ஒரு ஊருக்குப் பாதையைச் செப்பனிட்டு வழி பிரிகின்ற இடத்தில் கைகாட்டி மரத்தை அமைத்திருப்பார்கள். அக் கைகாட்டி, புதிதாகப் போகின்றவனுக்கு எத்துணைப் பயன் தரும் என்பதை வழிப்போக்கர்கள் அறிவார்கள்.

எனவே, இறைவனை நாடி பலப் பல பிறவிகளில் பிரயாணஞ் செய்து இறைவனைக் கண்ட மகான்கள், நமக்கு வழிகாட்டிகளாக இருக்கின்றார்கள். அவர்களை மார்க்கதரிசி என்பர்.

இறைவனை அடைவதற்குரிய பல வழிகளில் சிறந்தவை இரண்டு. ஒன்று விதிமார்க்கம்; மற்றொன்று பக்தி மார்க்கம். பக்தி என்றாலும் அன்பு என்றாலும் ஒன்று.

வேதாகமங்கள் கூறிய விதிப்படி ஒழுகுதல் விதிநெறி.

அன்பையே முதன்மையாகக் கொண்டு ஒழுகுதல் அன்புநெறி.

விதிநெறி மண்வழி நடந்து போவது போன்றது. அன்புநெறி விண் வழி பறந்து போவது போன்றது.

"பக்தி வலையில் படுவோன் காண்க" என்பார் மாணிக்கவாசகர்.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்கிறார் வடலூர் வள்ளலார்.

இறைவனாகிய மலையை அன்பு என்ற பிடியில் அடக்கிவிடலாம்.

அன்புக் கயிற்றினால் இறைவனைக் கட்டி விடலாம். சக்குபாயின் கயிற்றினால் பாண்டுரங்கன் கட்டுப்பட்டார். சகதேவன் கண்ணபிரானைக் கட்டிவிட்டான்.

பணத்தைக் கொடுத்து அரிசி முதலிய பண்டங்களைப் பெறுவது போல், அன்பைக் கொடுத்து

இறைவனுடைய அருளைப் பெற வேண்டும்.

அன்பு நான்கு வகைப்படும்:—

(1) மந்ததரம்:—இது வெயிலில் அரக்கு உருகுவது போன்றது.

(2) மந்தம்:—இது அழலிடை மெழுகு உருகுவது போன்றது.

(3) தீவிரம்:—இது நெருப்பில் வெண்ணெய் உருகுவது போன்றது.

(4) தீவிரதரம்:—இது தைல தாரையைப்போல சதா இடையீடின்றி அவிச்சின்னதாரையாக உருகுந் தன்மையது.

''முருகன் குமரன் குகன் என்று
மொழிந்து
உருகுஞ் செயல் தந்துணர்
வென்ற ருள்வாய்''

என்று கந்தரநுபூதியில் அருணகிரிநாதர் வேண்டுகிறார்.

இங்ஙனம் உருகும் அடியவர்களின் இருவினையாகிய இருளை இறைவனாகிய உதய சூரியன் மாற்றுகின்றான்.

இரணியனை வதைத்தபின் நரசிம்மமூர்த்தி பிரகலாதரைப் பார்த்து ''உனக்கு என்ன வரம் வேண்டும்'' என்று கேட்டார்.

பிரகலாதர் பொன்னும் பொருளும் பதவியும் கேட்டாரில்லை.

''இறைவனே! எண்ணில்லாத பிறவி எடுத்து அயர்ந்தேன். அப்பிறவிகளில் பெற்ற செல்வங்கட்கும் எண்ணில்லை. ஆதலால் புழுவாய்ப் பிறக்கினும் அன்பு என்ற ஒன்றே வேண்டும்'' என்று வேண்டினார்.

முன்பு பெறப்பெற்ற பேறோ
முடிவில்லை;
பின்பு பெறும்பேறும் உண்டோ?
பெறுகுவனேல்
என்பு பெறாத இழிபிறவி எய்
திடினும்
அன்பு பெறுகை அரும்பே(று)
எனக்கென்றான்.

பானு கோபனை வதைத்து விட்டு, வாகைமாலை சூடிக் கொண்டு, வீரவாகு தேவர் முருகவேளைத் தொழுது நின்றார்.

முருகவேள் தம்பியை நோக்கிக் கருணை பொழிந்து ''உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்'' என்றார்.

வீரபாகு தேவர் வரம் கேட்டார். அது என்ன வரம்? அன்பைத்தான் யாசிக்கின்றார்.

கோல நீடியநிதிபதி வாழ்க்கை
யுங் குறியேன்
மேலையிந்திரன் அரசையுங்
கனவிலும் வெஃகேன்
மாலயன் பெரும்பதவியும்
பொருள்என மதியேன்
சால நின்கழல் அன்பையே
வேண்டுவன் தமியேன்!

இத்தகைய அன்பு நெறி சென்றவர்களில் தலையாயவர் கண்ணப்ப நாயனார்.

''கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்''

—திருவாசகம்

காளத்தியப்பரை வேதாகமங்களில் கரைகண்ட சிவகோசரியார் விதி நெறியில் வழிபட்டார்.

கண்ணப்பர் அன்பு நெறியில் வழிபட்டார்.

கண்ணப்பர் என்பும் மாமிசத் துண்டும் சிந்திச் செய்த வழி பாட்டைக் கண்டு, சிவகோசரி யார் பெரிதும் வருந்தினார்.

காளத்தியப்பர் கண்ணப்பர் கனவிலே சென்று, ''சிவகோசரி யார் செய்யும் வழிபாட்டைப் பார்த்து, அதன்படி வழிபடு'' என்று அறிவித்தாரில்லை.

சிவகோசரியார் கனவிலே தோன்றி, ''அன்பனே! நாள் தோறும் இங்கு என்னை வழிபடுப வன் அன்பே ஒரு வடிவானவன்.

''அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு.

''அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவு.

''அவனுடைய செயல்களெல் லாம் நம்முடைய செயல்கள்''

என்றுகூறி, ''நாளை நீ நமக்குப் பின் ஒளித்திருந்து பார். அவன் எவ்வாறு நம்மை வழிபடுகின் றான் என்பதை நேரில் காண்பா யாக'' என்று அருளிச்செய்தார்.

காளத்தியப்பருக்குப் பின் சிவ கோசரியார் நின்றார். முன்னே கண்ணப்பர் நின்றார்.

விதிமார்க்கம் பின்புறமும், அன்பு மார்க்கம் முன் புறமும் நின்றன. விதி மார்க்கத்துக்கு அன்பு மார்க்கத்தைக் காட்டி யருளினார்.

கண்ணப்பருடைய அன்பு இமா சலம்போல் நின்றது. வழியிலே தேய்ந்த பழைய செருப்பு இறை வனுடைய திருமுடிமேல்ஏறியது. கொப்பளித்து உமிழ்ந்த எச்சில் நீர் கங்காசலம்போல் குளிர்ந் திருந்தது. கடித்துப் பார்த்த எச் சில்மாமிசத்துண்டு,தேவாமிர்தம் போல இறைவனை மகிழ்வித்தது.

வனவேடன் பக்த சிரோன்மணி யாக ஆனான். பக்தி என்னதான் செய்யாது?

பக்தியே சிறந்த சாதனமாகும்.

தங்கம் அணிகலமாக ஆவது போல், பக்தியே முக்தியாகும்.

''பக்தி பண்ணிக் கொண் டிருந்தால்

முக்தி பெறலாமே''

—என்கிறார் கோபாலகிருஷ்ண பாரதியார்.

என்பே விறகா யிறைச்சியறுத் திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்த வொண்ணாதே

—திருமந்திரம்.

அன்பு மிகுந்தால் உள்ளம் மட் டும் அன்றி என்பும் உருகும். அங் ஙனம் உருகினோர் இறைவனை நினைந்து இரவு பகலாகப் பாடு வர்; ஆடுவர்; தொழுவர்.

''அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என் பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே''

—என்கின்றார் திருமூலர்.

ஆதலால், மனிதப் பிறப்பு எடுத்த நாம், இறைவனிடம் என் பும் உருகஅன்பு செய்து, அப்பரம னுடையஅருளைப்பெற்று, பெற்ற பிறவியின் பயனைப் பெறுவோ மாக.



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
ஸ்டூடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
Kali mark
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரதஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

எவன் தன்னிடம் வேலை செய்கிறவர்களுக்குக் கொடாமல் நல்ல உணவை உட்கொள்ளுகிறானோ, அதேபோல் நல்ல ஆடைகளை தரித்துக் கொள்ளுகிறானோ, அவனுக்கு மேல் கடினமான மனமுடையவன் வேறு யார் இருக்க முடியும்?

வில்லாளியால் விடப்பட்ட அம்பானது ஒருவனைக் கொல்லும், அல்லது கொல்லாமல் விட்டாலும் விடும். புத்திமானால் உபயோகிக்கப்பட்ட புத்தியானது, அரசனுடன் கூடிய தேசத்தையே அழித்துவிடும்.

விஷரஸமானது ஒருவனைக் கொல்லுகின்றது. அதே போல் ஆயுதத்தால் ஒருவன் கொல்லப் படுகிறான். ஆனால் அரசன் செய்த தவறான மந்திராலோசனையானது, மக்களுடன் கூடிய அரசனையும் தேசத்தையும் அழிக்கும்.

ருசியான வஸ்துவை ஒருவனாகச் சாப்பிடக்கூடாது. விஷயங்களை ஒருவனாக ஆலோசிக்கக் கூடாது. ஒருவனாக வழியில் நடக்கக்கூடாது. எல்லோரும் தூங்கும்போது, ஒருவனாக விழித்துக் கொண்டிருக்கக்கூடாது.

[பலர் தூங்கும்போது ஒருவன் விழித்துக்கொண்டிருந்து யாருடைய பொருளாவது காணமற்போனால், இவனையே சந்தேகிப்பார்கள் எனக் கருத்து].

அரசனான திருதராஷ்டிரன் நல்ல போகங்களையும் புண்ய லோகங்களையும் அடையவிரும்பி, அவை எதனால் கிடைக்குமெனக் கேட்க விரும்பினான்.

அதற்கு விதுரர், ஓ அரசனே, நீர் எந்தப் பரமாத்மாவை அறியவில்லையோ, அது இரண்டற்ற ஒன்றாகவே உள்ளது. ஸத்ய

மாகவும் உள்ளது. அதுவே நல்ல போகங்களையும் புண்ய லோகங்களையும் அடைவதற்குப் படிக்கட்டாக அமைந்து, ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்குக் கப்பலைப்போல் உள்ளது.

பொறுமை யுள்ளவர்களிடம் ஒரு தோஷத்தைத்தான் சொல்ல முடியும். பொறுமையுள்ள இவனை ஜனங்கள் சக்தியில்லாதவனாக நினைக்கின்றார்கள் என்ற ஒரு தோஷம்தான். வேறு தோஷம் அவர்களுக்கு வர முடியாது. ஆனால் அது இவனுக்கு தோஷமல்ல. அந்தப் பொறுமையானது இவனுக்குப் பெரிய பலமாகும் (சக்தியாகும்).

சக்தி யில்லாதவர்களுக்குப் பொறுமை குணமாகிறது. சக்தியுள்ளவர்களுக்குப் பொறுமை அலங்காரமாகிறது. பொறுமையால் உலகத்தை வசப்படுத்தலாம். பொறுமையால் எதைத்தான் சாதிக்க முடியாது?

பொறுமையாகிற கத்தி எவனது கையில் இருக்கிறதோ, அவனைக் கெட்ட மனிதன் என்ன செய்ய முடியும்? கூளமில்லாத இடத்தில் மணலில் விழுந்த நெருப்பானது, தானே அணைந்து விடுகிறது.

எந்த அரசன் சத்ருவை எதிர்த்து அடக்கவில்லையோ, எந்தப் பிராமணன் தீர்த்தம் க்ஷேத்திரம் இவைகளுக்குச்செல்லவில்லையோ, இவ்விருவர்களையும் பூமியானது வளையில் இருக்கும் எலிகளை பாம்பு விழுங்குவது போல் விழுங்கிவிடுகிறது. (அவர்கள் கீர்த்தி அற்றவர்களாக ஆகி அவர்களது குலமும் மங்கிவிடுகிறதென்பது கருத்து.)

இவ்வுலகில் இரண்டு காரியங்கள் செய்கிறவன் நன்கு பிரகாசிக்கிறான். கடுரமான சொல்லைச் சொல்லாமலும், துஷ்டர்களைப் பூஜிக்காமலும் இருப்பது என்ற இவ்விரண்டுமேயாகும்.

ஓ புருஷச்ரேஷ்டனே! இவ்வுலகில் இரண்டு பேர்கள் பிறர் செய்வதைப் பார்த்துத் தாமும் செய்வார்கள். ஸ்திரீகள் பிறர் ஆசை கொண்ட வஸ்துவில் ஆசைப்படுவார்கள். ஸாமான்ய ஜனங்கள் பிறரால் கொண்டாடப்பட்டவர்களைத் தாமும் கொண்டாடி பூஜிப்பார்கள்.

பொருளற்றவன் தான் போகங்களை அனுபவிப்பதற்காகப் பல வஸ்துக்களை வாங்கவிரும்புவதும், சக்தியற்றவன் கோபித்துக்கொள்வதும், இவ்விரண்டும் கூர்மையான முள்குத்தித் துயரத்தை அளிப்பதுபோல் சரீரத்தைச் தபிக்கச் செய்துவிடும்.

குடும்பியானவன் முயற்சி இல்லாமலிருத்தலும், ஸன்யாஸியானவர் பல காரியங்களைச் செய்வதும் என்ற விபரீதமான செயல்களால், இவ்விருவரும் பிரகாசிப்பதில்லை.

(ஸன்யாஸி பிரணவ ஜபம் செய்துகொண்டு பகவத்தியானம் செய்ய வேண்டும். குடும்பியான கிரஹஸ்தன் தன் ஸ்வதர்மத்தை அனுஷ்டித்துக்கொண்டு யதிகளையும் பூஜிக்க வேண்டும்.)

ஓ அரசனே, இந்த இரண்டு புருஷர்கள் ஸ்வர்க்கத்துக்கும் மேலாகிய பிரம்மலோகம் முதலியவைகளில் இருப்பவர்களாக ஆகிறார்கள். அவர்களில் ஒருவர் பிரபுவாக இருந்து பொறுமையாக இருப்பவர். மற்றொருவர் தரித்திரனாக இருந்தும் நிரம்ப தானங்களைச் செய்பவர்.

நல்ல வழியில் ஸம்பாதித்த பொருள் தன்னை விட்டு விலகுவதற்கு இரண்டு காரணங்கள் என்பதை புத்திமான்கள் உணர

வேண்டும். ஒன்று அயோக்ய னுக்கு தானம் செய்வது. மற்றொன்று நல்லவர்களுக்குக் கொடாமலிருப்பது.

இரண்டு பேர்களைக் கழுத்தில் கடினமான கல்லைக் கட்டி ஜலத்தில் போட வேண்டும். ஒருவன் பணமிருந்தும் தானம் செய்யாமலிருப்பவன். மற்றொருவன் தரித்திரனாய் இருந்தும் மந்திர ஜபங்களைச் செய்யாமலும், ஸ்தோத்திரம் முதலியவைகளைப் படிக்காமலும் இருப்பவன்.

ஓ புருஷச்ரேஷ்டனே, இந்த இரண்டு பேர்களும் சூரிய மண்டலத்தைத் தாண்டிக் கொண்டு செல்வார்கள். அதில் ஒருவர் தியான யோகத்துடன் கூடிய யதி. மற்றொருவர் யுத்தத்தில் பின்புறம் காட்டாமல் எதிர்த்து யுத்தம் செய்து மரித்தவர்.

அரசன் இந்த நான்கு காரியங்களை விட்டுவிட வேண்டும். அதை அறிவாளி என்னவென்று அறிய வேண்டும். அவைகளாவெனில் அல்ப புத்தியுள்ளவர்களுடனும், சீக்கிரமாகச் செய்ய வேண்டிய காரியத்தைத் தாமதித்துச் செய்கிறவனுடனும், சோம்பேறிகளுடனும், வேலை செய்யாமல் புகழ்ச்சியாக மட்டும் பேசிக் கொண்டிருப்பவர்களுடனும், மந்திராலோசனை செய்யக்கூடாது.

ஓ அரசனே, நிரம்ப பொருளுள்ள கிரஹஸ்த தர்மத்திலிருக்கும் உனது வீட்டில், இந்நான்கு பேர்களும் எப்பொழுதும் வஸிக்கட்டும். வயது முதிர்ந்த பங்காளியும், பந்துக்களில்லாத ஸத்குலத்தில் பிறந்தவனும், தரித்திரனை ஸ்னேஹிதனும், குழந்தையில்லாத சகோதரியுமாவார்கள்.

[வயது முதிர்ந்த பங்காளி யாவருக்கும் குலதர்மங்களை உபதேசிப்பார். ஆதரவற்ற ஸத்குலத்தில் பிறந்தவன், குழந்தைகளுக்கு ஸதாசாரங்களை உபதேசிப்பான். தரித்திரனை ஸ்னேஹிதன், நன்மையை உபதேசிப்பான். குழந்தை இல்லாத சகோதரி பொருளைப் பாதுகாப்பாள்].

பிருஹஸ்பதியானவர் உடனே பலனை அளிக்கக்கூடிய நான்கு விஷயங்களை உபதேசித்தார். அவைகளை உமக்குக் கூறுகிறேன். ஓ அரசனே, கேளும். தேவதைகளுடைய எண்ணம், புத்திமான்களுடைய மஹிமை, நன்கு படித்தவர்களுடைய வணக்கம், பாபிகளுடைய கெட்ட செயல் இவைகள் உடனே பயன் அளிக்கும்.

[தேவர்களை நாம் பூஜித்தால், அவர்கள் நமக்கு அனுக்ரஹிக்க வேண்டும் என்று நினைத்ததும் பயன் கிட்டிவிடும். புத்திமான்களாகிய மகான்களை ஸேவித்தால், அவர்களுடைய மஹிமை உடனே நமக்குப் பயனை அளித்து விடும்.]

அக்னி ஹோத்ரம், மௌனம், அத்யயனம், யக்ஞம் இந்த நான்கு கர்மாக்களும் அபயத்தை அளிக்கக் கூடியன. அவைகள் வேறு விதமாக கௌரவத்திற்காகச்செய்யப்பட்டால், பயத்தை அளிக்கின்றன.

தந்தை, தாய், அக்னி, ஆத்மா, குரு, அக்னிக்கொப்பான இவ்வைந்து பேர்களையும் மனிதன் முயற்சியுடன் ஆராதிக்க வேண்டும்.

உலகில் தேவர்கள், பித்ருக்கள், மனுஷ்யர்கள், யதிகள், அதிதிகள் ஆகிய இந்த ஐந்து வகையார்களையும் பூஜிப்பவன் மிகப்புகழை அடைவான்.

ஓ அரசனே, எங்கு தாங்கள் சென்றாலும், இவ்வைந்து பேர்களும் தங்களைத் தொடர்ந்து இருக்க வேண்டும். ஸ்நேஹி

தர். சத்ருக்கள், மத்யஸ்தர்கள் (நடுநிலைமை வஹிக்கிறவர்கள்), நாம் ஆச்ரயிக்க வேண்டிய பெரியோர்கள், நம்மை அண்டிப் பிழைப்பவர்கள் — இவர்களாகும். (குறிப்பு: எதிர்க்கட்சிக்காரர்கள் அரசனிடமுள்ள தவறுகளை தைரியமாகக் கூறுவார்கள். நடுநிலைமை வஹிக்கிறவர்கள் ''அவர்கள் சொன்ன தவறைத் திருத்திக்கொள்'' எனக் கூறுவார்கள்.

ஸம்பத்தை விரும்புகின்ற மனிதன், அதிக நித்திரை, சோம்பல், பயம், கோபம், முயற்சி செய்யாமலிருப்பது, காரியத்தைத் தாமதமாகச் செய்வது என்ற இந்த ஆறு தோஷங்களையும் விட்டுவிட வேண்டும்.

கல்வியை நன்கு சொல்லிக் கொடுக்காத ஆசார்யனையும், வேத மந்திரங்களை நன்கு ஆவ்ருத்தி செய்யாத ரித்விக்கையும், பாதுகாக்காத அரசனையும், அப்பிரியமாகப் பேசும் மனைவியையும், பசுக்களைத் திடல்களில் மேயவிட்டுத் தெருவில் வந்து திரியும் மாடு மேய்ப்பவனையும், தெருவில் சஞ்சரிக்காமல் காட்டிற்குச் செல்லும் க்ஷவரகனையும், மனிதன் உடைந்த தோணியை ஸமுத்திரத்தில் தள்ளுவது போல் விட்டுவிட வேண்டும்.

மனிதன் ஸத்யம், தானம், சோம்பலின்மை, பொருமை இல்லாமை, பொறுமை, தைரியம் ஆகிய ஆறு குணங்களையும் ஒரு பொழுதும் விட்டுவிடக் கூடாது.

வினைப்பயனும் குடும்ப வாழ்க்கையும்



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

வினைப்பயனிலிருந்து யாரும்தப்பித்துக்கொள்ள முடியாது. முற்பகலில் செய்கிற வினையின்விளைவு பிற்பகலில் வாய்த்தே தீரும்.

பூர்வ ஜன்மவினைப்பயன், சம்ஸ்காரங்களாக மறு பிறப்பில் மனிதனைத் தொடர்ந்து வருகின்றன. பிரராப்த கர்மம் பலன் தருவதை யாரும் தடுக்க முடியாது.

பழவினைப் பயனை மனிதன் அனுபவித்தே தீரவேண்டும். குருடன் ஒருவன் கங்கா ஸ்நானம் செய்தான். அதன் பயனாகப் பாபங்களனைத்தும் அவனை விட்டுப் போய்விட்டன. ஆயினும் அவன் பழையபடி குருடனாகவே இருந்தான். அவன் குருடன் ஆனதற்குக் காரணம் பழவினை.

'கர்மம் ஒவ்வொன்றுக்கும் கர்ம பலன் உண்டு. மிளகாயைச் சாப்பிட்டால் வயிற்றில் எரிச்சல்உண்டாவது திண்ணம். பாபம் செய்கின்றவனுக்கு அதன் விளைவு வந்தே தீரும். ஆனால் ஈசுவர சாக்ஷாத்காரம் செய்திருக்கிறவன் பின்பு பாபம் எதையும் செய்வதில்லை.

அவரவர் செயலுக்கு அவரவர் பொறுப்பாளி என்னும் எண்ணம் உள்ளத்தில் ஊறியில்லாது போய்விட்டால், மனிதன் துணிந்து பாபத்தை ஏராளமாகச் செய்வான். ஈசுவரானுபூதி அடையப் பெற்றவர்கள் மனிதனுக்குஇச்சா சுதந்திரம் சிறிதேனும் இல்லையென்பதை நன்கு அறிகின்றனர். மனிதன் யந்திரம்; ஈசன் அந்த யந்திரத்தைஇயக்குகின்ற யந்திரீ. செயல் அனைத்துக்கும் அவரே கர்த்தா.

(பூ கைலாசம் என்னும் ஊரில், சாது ஒருவரை அவ்வூரார் சித்திரவதை செய்து கொன்றுவிட்டனர். ''எல்லாம்ஈசன்செயல் என்கிறீர்கள். இதையும் ஈசன்செயல் என்பதா? சாதுவுக்கு இத்தகைய கதியை ஈசன் ஏன் கொண்டு வந்தார்?'' என்னும் கேள்வி பிறந்தது.

அதற்குப் பரமஹம்ஸர் விடை விடுத்தார்)

வினைப்பயன் என்பது எல்லா சரீரங்களுக்கும் உண்டு. அந்த வினைப்பயன்களும் ஈசன்செயலே. தங்கபஸ்பம் செய்கிற வைத்தியர்கள், ஒரு மூசைக்குள் ஏதேதோ ரசாயன வகைகளையும் மூலிகைகளையும் போட்டுத் தங்கத்துண்டு ஒன்றையும் அதனுள் வைத்துப்

புடம் போட்டு ஊதுகின்றனர். தங்கம் உருகி, மற்ற மூலிகைகளோடு கூடி, தங்க பஸ்பம் ஆகிவிடுகிறது. அதன் பிறகு மூசையை ஜாக்கிரதையாக வைத்திருந்தால் என்ன? அல்லது உடைத்துத் தள்ளிவிட்டால்என்ன? பெற வேண்டிய தங்கபஸ்பத்தைச்செய்தாய்விட்டது. ஶ்ரீ கைலாசத்திலிருந்தசாது பிரம்ம ஞானத்தை அடைந்துவிட்டார். அவர் உடலுக்கு அழிவு எவ்விதத்தில் வந்தால்தான் என்ன? அதனுல் அவருக்கு நஷ்டம்ஒன்றுமில்லே. அவர் கஷ்டப்பட்டார் என்று அறியாமையால் நாம் எண்ணுகிறேம்.

உலகக் கடமைகளே ஒருவன் எவ்வளவு காலம் செய்து கொண்டிருக்கவேண்டும்?

பிஞ்சு தோன்றும் பொழுது பூ தானுக உதிர்ந்து விடுகிறது. ஈசுவர சாக்ஷாத்காரம் செய்தான பிறகு, உலகக் கிருத்தியம் எதையும் செய்யவேண்டிய அவசியமில்லே. அதைச் செய்வதற்கு எண்ணமும் அப்பொழுது வருவதில்லே.

இல் வாழ்பவர்களுக்கும் ஈசுவரானுபூதி கிட்டுமல்லவா?

அனேவர்க்கும் ஆண்டவனுடைய அருள் நிச்சயமாகவே கிட்டும். ஆனுல் ஒவ்வொருவரும் குரு காட்டியுள்ள நன்னெறியைக் கடைப்பிடிக்கவேண்டும்.

ஆத்ம சாதனத்தின் பெயரால் சாதகன் ஒருவன் தனது மனேவி மக்களின் சம்ரக்ஷணேயைக் கவனிக்காது விட்டுவிடலாகாது. அப்படிச் செய்வது வெட்ககரமான காரியம். தன்னேச் சார்ந்திருப்பவர்களுக்குத் தக்க முறையில் ஆதரவு அளிப்பதும் ஆத்ம சாதனமாகும்.

உங்களுக்கு அமைந்துள்ள கடமைகளே யெல்லாம் முறையாகச் செய்யுங்கள். அதற்கிடையில் மனதை பகவான் மீது நாட்டி வையுங்கள். உற்றூர் உறவினர்க்கு வேண்டியவாறு பணிவிடை செய்யுங்கள். அன்புடன் அவர்களேப் பரிபாலியுங்கள், ஆனுல் உண்மையில் அவர்கள் உங்களுக்குச் சொந்தம் அல்ல என்பதை உள்ளத்தினுள் உறுதியாகக் கொண்டிருங்கள்.

குடும்பத்துக்கு ஒருவன் எவ்வளவு காலம் தன் கடமையைச் செய்யவேண்டும்?

குடும்பத்திலுள்ளோர் ஆதரவற்றவர்களாய் இருக்கும் பொழுது, குடும்பி ஒருவன் அவர்களேப் பராமரித்து வரவேண்டும். ஆனுல் தன் மைந்தனுக்கு வயது வந்து தனக்குத்தானே பொருள் தேடிக்கொள்ள வல்லவனுகும் பொழுது, தந்தை அவனுக்குச் செய்யவேண்டிய கடமை ஒன்றும் இல்லே. குஞ்சு தனக்குத் தானே இரை தேடிக்கொள்ள வல்லதாகும்பொழுது, அதைத் தன்னிடத்திலிருந்து தாய்க்கோழி விரட்டியோட்டிவிடுகிறது.

குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுள், பெரும்பான்மையோர் குடும்ப அல்லல் என்னும் படுகுழியிலே மூழ்கிப் போய் விடுகின்றனர். சாதனங்கள் புரிந்து மனத்தைக் கடவுளிடத்து, வைத்திருக்கும் வெகு சிலரே, குடும்ப வாழ்க்கை வாழ்ந்து கெட்டுப் போகாதிருக்கின்றனர்.

துரியோதனனும் அவனுடைய சகோதரர்களும் அவரவர் மாளிகைகளேச் சிலாகித்து ஶ்ரீ கிருஷ்ண பகவானுக்குக் காட்டினுர்கள். ஆனுல் அவரோ, பரம பக்தனுகிய விதுரருடைய வீட்டில் மகிழ்வுடன் எழுந்தருளினுர். கன்றினுக்குப் பசு இரங்குவது போன்று, பக்தனுக்கு பகவான் இரங்குகிறுர்.

அதிகமான செல்வம் சம்பாதிப்பதற்கு நாம் முயற்சி யெடுத்துக் கொள்ளலாமா?

குடும்பத்தி லிருப்பவர்களெல்லாம் தெய்வப் பற்று உடையவர்களாக இருப்பார்களாகில், அவர்களை சம்ரக்ஷித்தல் பொருட்டு அதிகமான செல்வம் தேடுதற்கு அனுமதி உண்டு. வருவாயை அதிகப் படுத்தலாம். ஆனால் அதற்கு நேர்மையான முறையைக் கையாளவேண்டும். பணம் சேகரிப்பது வாழ்க்கையின் குறிக்கோள் அல்ல; ஆண்டவனுக்கு அரும்பணி யாற்றுவதே வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். பகவத் சேவைக்காகப் பயன்படுத்தும் செல்வத்தில் தீங்கு இல்லை.

சந்நியாசி ஒருவனுக்கு விஷயங்களைப் பற்றிய ஞாபகம் வருவதில்லை. ஆனால் குடும்பி ஒருவனுக்கோ, விஷயங்களைப் பற்றிய ஞாபகம்தான் வந்து கொண்டிருக்கிறது. ஆதலால் குடும்பி ஒருவன் தன்னை பகவானுடைய தாசனாகக் கருதிக்கொள்ள வேண்டும்.

உலகத்தவன் ஒருவன் தனது உலகக் கிருத்தியங்களுக்கிடையில் பகவானைப் பற்றிச் சிந்திப்பானாகில், அது பெரிதும் பாராட்டுதற்குரிய விஷயமாகும். உலகக் கடமைகளுக்கிடையில் கடவுளைப் பற்றிக் கருதுவது மிகக் கடினம்.

பணக்காரன் வீட்டில் இருக்கும் வேலைக்காரி, வீடு வாசல், பணக்காரனுடைய குழந்தை ஆகிய அனைத்தும் தனக்குரியவைகள் எனக் கருதிப் பணியாற்றி வருகிறாள். அதற்கிடையில் தன் சொந்தவீடு எட்ட எங்கேயோ ஒரு கிராமத்தில் இருப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறாள். அதே விதத்தில், உலகில் உன்னைச் சார்ந்துள்ள அனைவருடனும் சொந்தம் பாராட்டு. உண்மையில் இறைவன் ஒருவர் தான் உனக்குச் சொந்தம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்.

தந்தையே மைந்தனாக வடிவெடுத்துப் பிறக்கிறான். ஒருவனுக்கு நல்ல மைந்தன் வாய்ப்பானாகில், தந்தையினிடத்து அதற்கேற்ற நல்லியல்பு அமைந்திருக்கிறது என்பதை அது வெளியாக்குகிறது.

துறவி ஒருவன் சர்வகாலமும் ஈசுவரனைச் சிந்திப்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் குடும்பஸ்தன் ஒருவன் தனது குடும்ப பாரத்துக் கிடையில் கடவுளைக் கருத்தில் வைக்கமுயலுவானாகில், அது பெரிதும் பாராட்டத் தக்கது.

சான்றோர் ஒருவர் ஒரு வீட்டுக்கு எழுந்தருளும்போது, அவ்வீட்டார் வந்திருப்பவரை முறையாக உபசரித்து விருந்தோம்ப வேண்டும். வந்தவரைக் கவனியாது விட்டுவிட்டால், அவ்வீட்டாருக்கு அது தீமையாய் முடியும்.

நீ இப்பொழுது இருக்கிறபடி குடும்பஸ்தனாகவே இரு. ஆனால் குடும்பஸ்தனா யிருப்பதற்கிடையில், எப்படி வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை நீ தெரிந்திருக்க வேண்டும். உலகப் பற்று உன்னைக் கெடுத்துவிடும்; ஆனால் தெய்வப் பற்றோ உன்னை மேல் நிலைக்கு எடுக்கும். பற்றற்று இருந்து பகவானுக்காகவென்று பணிவிடை செய். முதுகில் பிள்ளை வந்திருக்கும் ஒருவன், மற்ற அலுவல்களையெல்லாம் செய்வதற்கிடையில் அப்பிள்ளையின் மீது சிறிது கருத்தைச் செலுத்திக் கொண்டே யிருப்பான். அதே விதத்தில், நீ குடும்பக் காரியங்களைச் செய்து கொண்டிருப்பதற்கிடையில் பகவானைப் பற்றிய எண்ணம் உறுதியாக இருக்கட்டும்.



வேடனும் திருடனும்

ஸ்ரீவித்யா மார்த்தாண்ட
பிரம்மஸ்ரீ

C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

இந்திரனுக்கு பிருகஸ்பதி பகவான் கூறுகிறார்:

முன் ஒரு காலத்திலே காஞ்சிபுரத்தில் வஜ்ரன் என்னும் ஒரு திருடன் இருந்தான். அவன் அந்த நகரத்தில் உள்ள செல்வந்தர்களின் பொருள்களை யெல்லாம் சிறிது சிறிதாகத் திருடிக்கொண்டே வந்தான். அவ்வாறு திருடியவற்றை அவன் ஒரு காட்டிலே கொண்டுபோய்க் குழி தோண்டிப் புதைத்து, அடையாளத்திற்காக அதன்மீது ஒரு சிலையையும் நட்டுவைத்தான்.

இதை வீரதந்தன் என்னும் வேடன் மறைந்திருந்து கவனித்துக் கொண்டிருந்தான். திருடன் போனவுடன், வேடன் வந்து அந்தச் சிலையை அகற்றிவிட்டு, குழியைத் தோண்டிப் பார்த்தான். உள்ளே ஏராளமான பொன்னும் மணியும் புதைத்து வைக்கப்பட்டிருப்பது அவனுக்குத்தெரிந்தது. அந்த திரவியத்தில் பத்தில் ஒரு பாகத்தை மட்டும் தனக்கு எடுத்துக்கொண்டு, மீதியை முன் போலவே புதைத்துக் குழியை மூடி, அதன் மேல் சிலையை நட்டு வைத்து விட்டு, வேடன் தன் வீட்டுக்குச் சென்றுவிட்டான்.

தன்னுடைய புதையல் இவ்வாறு களவாடப்பட்டதை அறியாமல், திருடன் மேலும் மேலும் பல்வேறு இடங்களிலிருந்து பொருள்களைத் திருடி வந்து, அந்தக் குழிக்குள்ளே புதைத்துவைத்துக்கொண்டு இருந்தான்.

வீட்டுக்குச் சென்ற வேடன், தான் காட்டில் திருடி வந்த திரவியத்தைத் தன்னுடைய மனைவியிடம் கொடுத்தான்.

அந்த மனைவி சொன்னாள்; 'நாதா, நம் வீட்டுக்கு அடிக்கடி உபாதானத்திற்காகவருகின்றனர்

அந்தணர், ''நீ விரைவில் ஒரு பணக்காரி ஆகப்போகிருய். வேடனிடத்திலும், நடிகனிடத்திலும், காட்டில் வாழ் மக்களிடத்திலும் இலக்குமிதேவி நீண்டநாள் தங்கியிருக்கமாட்டாள் என்று வால்மீகி முனிவர் முன்ஞெரு காலத்தில் சாபமிட்டிருக்கிருர். இருந்தாலும், நீ மிகவும் பாக்கியசாலியாகவும் புண்ணியசாலியாகவும் இருப்பாய்'' என்று என்னைப் பார்த்துக் கூறியிருக்கிருர். அவர்கூறினபடியே நமக்கு இப்போது செல்வம் கிடைத்திருக்கிறது. ஆனுல், இது நாம் சிரமப்படாமல் சம்பாதித்த பணம். ஆகையால் நம்மிடத்தில் நிலைத்திருக்கமாட்டாது. இது தானுகவே நம் கையைவிட்டுப் போவதற்குள், இதனை நாம் தருமகாரியங்களில் செலவழித்துவிடவேண்டும்.'

மனைவியின் இந்த நல்லுரையைக் கணவன் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டான். காஞ்சிமாநகரின் கிழக்குப்பாகத்தில், தான் திருடி வந்த செல்வத்தைக் கொண்டு அவன் ஒரு விசாலமான குளத்தை வெட்டத் தொடங்கிஞன்.

ஆனுல், குளத்தை முழுமையாக வெட்டி முடிப்பதற்குள், அவன் கையிலிருந்த பணம் எல்லாம் காலிஆகிவிட்டது. எனவே, அவன் மறுபடியும் காட்டுக்குச் சென்று, வஜ்ரனுடைய புதையலிலிருந்து மேற்கொண்டு சிறிது திரவியத்தைத்தோண்டியெடுத்து வந்தான்.

இவ்வாறு அடிக்கடி போய்த் தோண்டியெடுத்து வந்து, அந்தக் குளத்தை வெட்டி முடித்தான். அங்கு ஒரு பெருமாள் கோயிலையும்சிவன்கோயிலையும் கட்டிஞன். சுற்றிலும் உள்ள காடுகளை வெட்டி, மேலும் பல ஆலயங்களையும் வீடுகளையும் கட்டி, அவற்றை தேவதைகளுக்கும் அந்தணர்களுக்கும் அர்ப்பணம் செய்தான்.

தேவராதர் என்னும் ஓர் அந்தணரைத் தன் புரோகிதராகக் கொண்டு, அந்தப் பட்டினத்துக்குத் தேவராதபுரம் என்று பெயரிட்டான். அதனுல் மகிழ்ச்சியடைந்த தேவராதரும் மற்றைய அந்தணர்களும், வீர தந்தன் என்னும் அவனுடைய பழைய பெயரை மாற்றி, த்விஜவர்மா என்ற ஒரு புதுப் பெயரிட்டு அழைத்தார்கள். அதேபோல் அவன் மனைவிக்கும் சீலவதி என்ற புதுப் பெயரைச் சூட்டிஞர்கள்.

சிறிது காலத்திற்குப் பின்னர், த்விஜவர்மா மரணம் எய்திஞன். அப்போது அந்த ஜீவனை அழைத்துச் செல்வதற்காக, யமன், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய நால்வரின் தூதர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் ஒவ்வொருவரும், த்விஜவர்மனுடைய ஜீவன் தம்முடைய லோகத்துக்குத்தான் வரவேண்டும் என்று சண்டையிட்டுக்கொண்டிருந்தசமயத்தில், அங்கு நாரதமுனிவர்வந்து சேர்ந்தார்.

அவர் சொன்ஞர்: ''இந்த வேடன் திருடப்பட்ட பிறருடைய திரவியங்களைக் கொண்டு, பல தருமங்களைச் செய்திருக்கிருன். ஆகையால், அந்த திரவியங்களுக்கு யார் யார் உரியவர்களோ, அவர்கள் எல்லாம் தம் வாழ்நாள் முடிந்து மரணம்அடையும் வரையில், இவன் இந்த மண்ணுலகிலேயே காற்றின் வடிவத்தில் தனியாக உலாவித் திரியட்டும்!''

நாரதரின் இந்த வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, தூதர்கள் அனைவரும் தத்தம் லோகங்களுக்குச்

சென்றுவிட்டார்கள். த்விஜவர்மாவும் வாயு வடிவத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினன்.

அப்போது, நாரதர் அவனது பத்தினியாகியசீலவதியைநோக்கி ''நீ எந்த வகையிலும் தோஷமற்றவளாகவே இருக்கிருய். ஆகையால், நீ செய்துள்ள புண்ணியங்களின் பயனுக நீ பிரம்மலோகம் செல்வாயாக!'' என்று ஆசிர்வதித்தார்.

ஆனுல், சீலவதி தன் நாயகனை விட்டு விட்டுத் தான் மட்டும் பிரம்மலோகம் செல்ல விரும்பவில்லை.

''என் கணவருக்கு சுய உருவம் வரும் வரையில், நான் இங்கேயே தான் இருப்பேன். அதன் பிறகு, அவருக்கு என்ன கதி கிடைக்கிறதோ, அதையே நானும் ஏற்றுக்கொள்கிறேன்'' என்ருள் அவள்.

அவளுடைய கற்பையும் மன உறுதியையும் கண்டு மகிழ்ச்சி அடைந்த நாரதர், அவளுக்கு சதரூத்ரீயம் என்னும்மந்திரத்தைஉபதேசித்தார். அவர் உபதேசித்த முறைப்படி, சீலவதி அந்தஉத்தமமான மந்திரத்தை ஜெபம்செய்து வந்தாள். அந்த ஜெபத்தின் மகிமையினுல், காற்ருய்த் திரிந்த த்விஜவர்மா மறுபடியும் தன் மனித உடலைப் பெற்ருன்.

காலக்கிரமத்தில், வஜ்ரன் என்னும் திருடனும், அவனிடம் தம் பொருள்களைப் பறிகொடுத்த செல்வவந்தர்களும், யமனுலகை எய்தினுர்கள்.


யமன் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் பாபத்தால் சம்பாதித்த திரவியங்கள் எல்லாம் புண்ணிய காரியங்களுக்குப் பயன்பட்டுவிட்டதால், அந்தப் புண்ணிய பலனை அனுபவிப்பதற்காக சொர்க்க லோகம் செல்லுங்கள்'' என்று அனுப்பிவைத்தான்.

த்விஜவர்மாவும் தன் பத்தினியுடன் அநேக புண்ணிய லோகங்களுக்குச் சென்று, இறுதியில் ருத்ரலோகத்தை அடைந்து, அங்கே சிவகணங்களுக்கு அதிபதியாகி, இன்றைக்கும் கைலாசத்தில் வாழ்ந்து வருகிருன்.

குளம் வெட்டினது, ஆலயங்களைக் கட்டினது இவற்ருல் விளைந்த புண்ணியபலத்தின் சரிபாதிப் பங்கு த்விஜவர்மாவுக்குக் கிடைத்தது. கால் பங்கு வஜ்ரன் என்னும் திருடனுக்குக் கிடைத்தது. மீதி கால் பங்கு, அவனிடம் தம் பொருள்களைக் களவு கொடுத்த செல்வவந்தர்களுக்குக் கிடைத்தது—என்று கூறி முடித்தார் பிரம்மதேவர்.

O

பக்தி, சிரத்தை, திடநம்பிக்கை, என்பவை எல்லாவற்றிற்கும் தேவை. ஆகவே, ஜபம் செய்யும்போது பகவானிடத்திலும், ஆசார்யனிடத்திலும் விசேஷமான பக்தியையும் ஜபத்தில் சிரத்தையையும் வெற்றி காண்பதில் திடநம்பிக்கையும் கொண்டிருப்பது மிகமிக அவசியம். பிறரிடத்திலும் பிற மதத்திலும் துவேஷமனப்பான்மை சிறிதுமிருக்கக் கூடாது.



பாரத ஸாவித்ரீ

வேத வேதாந்த
வித்வரத்னம்
பிரம்மஸ்ரீ

ஆர். முத்துக்கிருஷ்ண
சாஸ்திரிகள்

மஹாபாரதத்தில் கடைசிபர்வமான சுவர்க்காரோஹண பர்வத்தின் இறுதியில், இந்த "பாரத ஸாவித்ரீ" என்ற பகுதி காணப்படுகிறது. இதைப் பிரதி தினம் காலையில் எவன் படிக்கின்ருனே, அவன் பாரதம் முழுவதும் படித்ததால் உண்டாகும் பயனைப் பெற்று, பரப்ரஹ்மத்தை அடைகின்ருன் என்றும் கூறப்பட்டுள்ளது.

"ஸாவித்ரீ" என்ற சொல் காயத்ரீயைக குறிக்கும். அதை பிரதி தினம் அவசியம் ஜபிக்க வேண்டியது போல், பாரதத்தின் ஸாராம்சத்தை விளக்கும் இதையும் பிரதி தினம் படிக்க வேண்டுமெனக் குறிப்பிடவே, "பாரத ஸாவித்ரீ" என்று இதற்கு மிகப் பொருத்தமான பெயர் அமைத்திருக்கிறது.

ஸந்தியா காலத்தில் பாரதம் படிக்க வேண்டும்எனக் கூறப்பட்டது. மிகப்பெரியபாரதத்தை பிரதி தினம் படிக்கஇயலாதாகையால், பிரதி தினம் படிக்கத் தகுதியானவையும், பாரதஸாரஸங்கிரஹமாகவுமுள்ள நான்கு சுலோகங்கள் கீழே கொடுக்கப் பட்டு உள்ளன.

நம் பெரியோர்கள் எந்த விஷயங்களை முக்கிய நோக்கமாகக் கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று கருதிஞர்களோ, அவற்றைப் பிரதிதினம் காலையில் ஸ்மரிக்க வேண்டும் எனக் கூறுவர். இந்த சுலோகங்களை பிரதி தினம் படிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றபடியால் இவற்றில் அடங்கியுள்ள விஷயங்கள் நம் நாட்டு மக்களின் வாழ்க்

கைக்கு அடிப்படையாக உள்ளவை என்பதில் ஐயமில்லை. ஆதலால், எண்ணிறந்த நூல்களை எழுதிய வியாஸபகவான், உலகத்தாருக்குச் செய்த உயர்ந்த உபதேசம் என இந்த சுலோகங்களைக் கருதலாம். அவை யாவன:

மாதா பித்ரு ஸஹஸ்ராணி
புத்ரதாரசதாநி ச I
ஸம்ஸாரேஷ்வநுபூதாநி
யாந்தி யாஸ்யந்திசாபரே II

அனாதியான இந்த ஸம்ஸார வாழ்க்கையில், ஆயிரக்கணக்கான தாய் தந்தையர்களும், பிள்ளை பெண்டிர்களும், நம்முடன் பழகி வந்தவர்கள் சென்று விட்டனர். இப்பொழுதும் பலர் நம் முடன் கூடவே சென்று கொண்டிருக்கின்றனர். இனிவரும் பிறவிகளிலும் மற்றும் பலர் செல்லப் போகின்றனர். ஆதலால் இவ்வுலகில் எதுவும் நிலைபெற்றதில்லை.

ஹர்ஷஸ்தாநஸஹஸ்ராணி
பயஸ்தாநசதாநி ச I
திவஸே திவஸே மூடமாவி-
சந்தி ந பண்டிதம் II

ஒவ்வொரு நாளும், இந்த வாழ்க்கையில் துன்பத்திற்கும் இன்பத்திற்கும், ஆயிரக்கணக்கான சந்தர்ப்பங்களும் காரணங்களும் உண்டாகின்றன. ஆனால், அவையெல்லாம் அறிவில்லாதவனைத்தான் ஆட்கொள்ளுமல்லாமல், விவேகமுள்ளவனை அணுகா.

ஊர்த்வபாஹுர் விரௌம்
யேஷ
ந ச க: ச்ச்ருணோதி மே I
தர்மாதர்த: ச காம: ச
ஸகிமர்தம் ந ஸேவ்யதே II

கையை உயரத் தூக்கிக் கொண்டு நான் உரக்கக் கத்துகிறேன். ஆனால் ஒருவனும்கேட்பதில்லையே! அதாவது: தர்மத்திலிருந்துதான் அர்த்தமும், காமமும் உண்டாகின்றன. அப்படி இருக்க, எக்காரணம்பற்றி அந்த தர்மம் அனுஷ்டிக்கப்படுவதில்லை?

ந ஜாதுகாமாந்ந பயாந்ந
லோபாத்
தர்மம் த்யஜேஜ்ஜீவிதஸ்யாபி
ஹேதோ: I
நித்யோ தர்மஸ்ஸுகது: கே
த்வநித்யே
ஜீவோ நித்யோ ஹேதுரஸ்ய
த்வநித்ய: II

ஒரு பொழுதும் காமத்தினாலோ, பயத்தினாலோ, உலோபத்தினாலோ, உயிரைக் காக்க வேண்டுமென்றஎண்ணத்தாலோ தர்மத்தைக் கைவிடக்கூடாது. தர்மம் எப்பொழுதும் நிலையாக உள்ளது. சுகமும் துக்கமும் நிலையற்றவை. ஜீவன் நித்யமாக உள்ளவன். ஆனால் ஜீவன் என்ற தன்மை உண்டாவதற்குக்காரணமான அவித்யை அல்லது அஞ்ஞானம் நித்யமல்ல.

இமாம் பாரதஸாவித்ரீம்
ப்ராதருத்தாய ய: படேத் I
ஸ பாரதபலம் ப்ராப்ய
பரம் ப்ரஹ்மாதிகச்சதி II

இந்த பாரத ஸாவித்ரியை எவன் காலையில் எழுந்திருந்து படிக்கின்றானோ, அவன் பாரதம் படித்தலால் உண்டாகும்பயனைப் பெற்று, பரப்ரஹ்மத்தை அடைகின்றான்.

[''பாரதஸாவித்ரீ''யின்சுலோகங்களைப் படிக்க முடியாதவர்கள், அவற்றின் பொருளை மட்டுமாவது மனத்தில் பதிய வைத்துக் கொண்டு, அதனை அடிக்கடி நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், அவர்களும் பாரதம் முழுதும் படித்த பயனைப் பெறுவார்கள்.

— ஆசிரியர்

ஞானம், விஞ்ஞானம், பிரஞ்ஞானம்

வித்யா வாசஸ்பதி
பிரம்மஸ்ரீ
பி. என். பட்டாபிராம சாஸ்திரிகள்

கடவுளின் படைப்பில், மிருகங்களிடமிருந்தும் பறவைகளிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பல குணங்கள் இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக, காகம் ஓர் அசுத்தமான பறவையானாலும், தன் இனத்தைக் கூட்டி உண்ணுகிற குணம் அதற்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது. அதேபோல், மனிதனும் தனியாக உண்பதைத் தவிர்த்து, தனக்குக் கிடைத்ததை மற்றவர்களோடு பகிர்ந்து உண்ணவேண்டும் என்று தெரிய வருகிறது.

நாய், தனக்கு அன்னமிட்டவனுக்காகத் தன் உயிரையும் கொடுக்கக்கூடிய அளவுக்கு நன்றி உடையதாய் இருக்கிறது. அதனிடமிருந்து நாம் செய்ந்நன்றி அறிதல் என்னும் சீரிய பண்பைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவ்வாறேசிங்கத்திடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த குணம் ஒன்றுஇருக்கிறது. அதுதான் அரிமா நோக்கு எனப்படுவது.

அரிமா என்பது சிங்கத்தின் பெயர். நோக்கு என்றால் பார்வை. எனவே அரிமா நோக்கு என்பது சிங்கத்தின் பார்வை. மிருகங்களுக்குள்ளே சிங்கம் மிகவும் சக்தி வாய்ந்தது. அது மற்ற மிருகங்களை அவற்றின் பின்புறத்தே நின்று அடிக்காது. எதிரில் நின்றுதான் அடித்துக்கொல்லும். எந்த மிருகத்துக்கும்பயந்து அது பின்னேக்கி ஓடாது. முன்னேக்கியே செல்லும். அப்படிச் செல்லும்பொழுது, ஒரு தடவை தன் பின்புறத்தையும் பார்க்கும். அந்தப்பார்வைக்குத்தான் அரிமா நோக்கு என்று பெயர். வடமொழியில் அதனை சிம்மாவலோகனம் என்று சொல்வார்கள்.

சிங்கத்தினிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய நற்பண்பு ஒன்று உண்டு என்றால், அது இந்த சிம்மாவலோகனமே ஆகும். அதாவது, வாழ்க்கையில் நாம் எதிர்காலத்தை நோக்கி முன்னேறிச்செல்லும்போதே, இறந்த காலத்தில் நம் முன்னோர்களால் வகுத்துவைக்கப்பட்ட நெறிமுறைகளையும் நாம் இடையிடையே கவனித்துக்கொள்ள வேண்டும்என்பதுஅதன்பொருள்.

இது விஞ்ஞான காலம். விஞ்ஞானத்தில் மனிதன் நாளுக்கு நாள் முன்னேறிச் சென்று கொண்டு இருக்கிறான். அந்தமுன்னேற்றத்தில் அரிமா நோக்கும் கலந்திருக்க வேண்டுவது அவசியமாகும்.

ஞானம், விஞ்ஞானம், பிரஞ்ஞானம் என மூன்று வகைகள் உண்டு.